வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.12.2021 திங்கட்கிழமை | இதழ் : 01 | பக்கங்கள் : 16




# இந்தியாவில் வசிக்கும் ஈழஅகதிகள் வாக்களிக்க கோரினால் பரிசீலனை!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 06

நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் வசிக்கும் அகதிகள் வாக்களிக்கக் கோரினால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 15



# 21 பேர் கொரோனாவுக்கு உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 06

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 21 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15

# ஞானசார தேரரின் அணிக்கு கிழக்கில் பெரும் வரவேற்பு!

## ஜனாதிபதி ஊடக பிரிவு சொல்கிறது

கொழும்பு, டிசெ. 06

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணிக்கு, கிழக்கு மாகாண மக்களிடமிருந்து அமோக வரவேற்பு கிடைத்துள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலகங்களில் ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்கள் அறியப்பட்டன. இந்த நிலையில், ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் "ஒரே நாடு ஒரே 15

# வெடிபொருளை வெட்டியவர் உடல்சிதறி பலி; சிறுவன் காயம்!

## கிளிநொச்சியில் நேற்று பரிதாபம்

கிளிநொச்சி, டிசெ. 06

வெடிபொருளை வெட்டியபோது அது வெடித்ததில் இளம் குடும்பஸ்தர் உடல்சிதறி பலியானார்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி உமையாள்புரத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சிவலிங்கம் யுவராஜ் (வயது 25) என்ற இளம் குடும்பஸ்தரே பலியானார்.

அத்துடன், அவரின் சகோதரனான 13 வயது சிறுவனான சி. நிலக்சன் என்பவர் காயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத வெடிபொருளை 15

# "இந்து அடையாளத்துக்குள் பிரபாகரன் இருக்கவில்லை!"

சென்னை, டிசெ. 06

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் இந்து அடையாளத்தில் சிக்கிக்கொள்ளவில்லை என விடுதலை சிறுத்தைகள் 15

# இந்தியப் பிரதமருடன் கூட்டமைப்பு மீளசந்திப்பு நிகழ்வது மிகக்கடினம்

## இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திக்க மீளத் திகதி கொடுக்க இந்தியப் பிரதமர் மோடி விரும்பவில்லை என்று இந்திய அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் 15

# இந்தியாவிடம் 140 கோடி டொலர் கேட்கிறது இலங்கை

கொழும்பு, டிசெ. 06

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தி 15

# தொற்றால் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்க இந்து சமுத்திர நாடுகள் இணையவேண்டும்!

## ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு



கொழும்பு, டிசெ. 06

தொற்றுப் பரவலுக்குப் பின்னர் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்து சமுத்திர மாநாட்டின் தொடக்க 15

# முல்லைத்தீவு கடலில் நீராடிய ஒருவர் மரணம்; இருவர் மாயம்!

முல்லைத்தீவு, டிசெ. 06

முல்லைத்தீவுக்கு சுற்றுலா வந்த இளைஞர்கள் மூவர் கடலில் நீந்தியவேளை காணாமல் போயினர். இவர்களில் ஒருவர் மட்டும் சடலமாக மீட்கப்பட்டார். மற்றைய இருவரையும் தேடும் பணிகள் நேற்றிர 15






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## தொற்றால் வீழ்ந்த...

உரையை நிகழ்த்தும்போதே ஜனாதிபதி மேற்படி அழைப்பை விடுத்தார்.

உயிர்களைக் காப்பாற்றுவது என்பதை விலைமதிக்க முடியாவிட்டாலும், தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அதிக செலவை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளது. பொருளாதார செயல்பாடுகளின் மந்தகதியால், உலகளாவிய சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றன கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வல்லரசு நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளால் மாத்திரமே, அவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரையில், கோவிட் - 19 தொற்றுப் பரவல் இல்லாமல் போகப் போவதில்லை. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, வல்லரசு நாடுகள் உதவி புரிய வேண்டும்.

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு, எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை.

தொற்றுப் பரவல் என்பது, வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும், வீதத்தின் அடிப்படையில், பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரங்களுக்கு இது ஒரு மிகவும் கடினமான காலமாகும்.

தொற்று நோயால் மேலும் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளுக்கு கடன் மன்னிப்பு வழங்கல், மறுசீரமைப்பை மேற்கொள்ளல் அல்லது கடன் நிவாரண காலங்களை வழங்க வல்லரசு நாடுகளும் பல்வேறு நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தால், அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

இந்து சமுத்திரப் பிராந்தியமானது, மனிதக் கடத்தல்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களின் மையமாகக் காணப்படுவதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். போதைப் பொருள் வியாபாரமானது, பிராந்திய நாடுகளுக்குப் பெரும் பிரச்னையாக மாறியுள்ளது என்பதையும், புலனாய்வுப் பிரிவுகள், கரையோரப் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பிராந்திய நாடுகளின் கடற்படையினர் இடையேயான ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலமாகவே இதனை வெற்றிகரமாக முறியடிக்க முடியும்.

பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்குத் தற்போது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும், இவ்வாறான ஒருங்கிணைப்பே தேவைப்படுகின்றது. இது தொடர்பில் மிகக் கவனமாகக் கண்காணித்து இவற்றை இல்லாது ஒழிக்கவில்லையாயின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது - என்றும் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஞானசார...

சட்டம்" ஜனாதிபதியின் செயலணியினர் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு கிழக்கு மாகாணத்துக்கு வருகை தந்தமை, மாகாண மக்களுக்கு வழங்கிய கௌரவம் என்று மக்கள் கூறினர் என்றும் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், பதுரியா ஜும்மா பள்ளி - காத்தான்குடி - 06, கல்முனைப் பள்ளி, கடற்கரைப் பள்ளி உள்ளிட்ட பிரதேசத்தின் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்குச் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் உறுப்பினர்களை அழைத்துச் சென்று சுமுகமாக கலந்துரையாடினர். அங்கு விசேட மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. அத்துடன், ஆசிர்வாதமும் அளிக்கப்பட்டது.

இது தொடர்பில் செயலணியின் தலைவர் கலகொடை ஞானசார தேரர் கூறுகையில், "நீண்டகாலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்காக தற்போதைய ஜனாதிபதி நேர்மையாக முயற்சிப்பதாகவும் உண்மையான அமைதி, நல்லிணக்கத்தை எதிர்பார்க்கின்ற பௌத்த தேரர்கள், தமிழ் பூசகர்கள், முஸ்லிம் மௌலவிமார்கள், கிறிஸ்துவ பாதிரிமார்கள் உள்ளிட்ட அனைத்து மதத் தலைவர்களும் ஒருசேர ஒரே நாடு ஒரே சட்டத்தைக் கேட்டு, இச்சந்தர்ப்பத்தில் முன்னின்று செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## இந்தியப்...

வெளியாகியுள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை நாளையும், நாளை மறுதினமும் சந்தித்துப் பேசுவதாக இருந்தது. இதற்கான ஏற்பாடுகளை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்த போதிலும், இந்த சந்திப்பை பிற்போடுமாறு மூன்று காரணங்கள் குறிப்பிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியாவை கோரினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவின் மகனின் திருமணம், தனது கடவுச்சீட்டு காலாவதியானமை, வரவு - செலவு திட்டம் பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு வரவிருந்தமை போன்ற காரணங்களை குறிப்பிட்டு இந்த சந்திப்பை பிற்போடுமாறு சம்பந்தன் கேட்டிருந்தார்.

அவரின் இந்த கோரிக்கையையடுத்து இந்தியப் பிரதமர் குறித்த நாட்களில் கூட்டமைப்பினருடனான சந்திப்பை நிறுத்தியபோதிலும், சந்திப்புக்கு திகதியை வழங்கவோ அல்லது பிறிதொருநாளில் சந்திப்பு நிகழும் என்பதையோ உறுதிப்படுத்தவில்லை என்று இந்திய அரசியல் வட்டாரங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால், இந்த சந்திப்பு மீண்டும் நடப்பது என்பது கடினம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், இரா. சம்பந்தனின் இந்த முடிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடையேயும் கடும் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. (ஐ)

## இந்தியாவில்...

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வாக்குரிமை விழிப்பூட்டல்களை மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கான 2022 - 2025 வரையான காலப்பகுதிக்கான மூலோபாய திட்டத்தை தயாரிப்பதற்கான கூட்டம் நேற்று நடந்தபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், "இதுவரை இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் வாக்களிப்பது தொடர்பில் எந்தவிதமான கோரிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை. அரசியல்வாதிகளும் அது தொடர்பில் கரிசனை கொள்ளவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஆணைக்குழு தலைவர், புதிய முறைமையிலோ, பழைய முறைமையிலோ அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டோ விரைவாக மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாளர் ஹேரத், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான மொஹமட், பத்திரண, திவாரட்ண, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ். மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர் அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# தமிழ் முற்போக்கு கூட்டணியை பலப்படுத்த செயற்திட்டம்

## ஜ.ம.மு. அரசியல் குழுவில் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 06

கட்சியை சாத்தியமான அனைத்து மாவட்டங்களிலும் பலப்படுத்துவதுடன், ஜனநாயக மக்கள் முன்னணி அங்கம் வகிக் கும் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஏனைய பங்காளி கட்சிகளுடன் இணைந்து பலமான தேசிய அரசியல் இயக்கமாக கட்டி எழுப்பும் நோக்கில் கடுமையாக உழைக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்சி தலைவர் மனோ கணேசன் தலைமையில் நேற்று, கொழும்பு பிரைட்டன் விடுதியில் நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தின் போது புதிய பதவி நியமனங்கள் வழங்கப்பட்டு, கட்சி மற்றும் கட்சி உள்ளடங்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வளர்ச்சி தொடர்பில் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலகம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

கட்சியின் செயலாளர்-நாயகமாக பணி செய்து வந்த கட்சியின் முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர் கே. டி. குருசாமி, கட்சியின் பொது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் உப தலைவராக பணி செய்து வந்த கட்சியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா, சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் புதிய இரண்டு இணை உப தலைவர்களாக எம். சந்திரகுமார், எஸ். சசிகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கட்சியின் பதவி நிலை வகிபாகங்கள் மீண்டும் அரசியல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி கட்சியின் தலைவர்- மனோ கணேசன், பிரதி தலைவர் எம். வேலு குமார், பொது செயலாளர் கே. டி. குருசாமி, தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேசன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன, தவிசாளர் ஏ. ஜெயபாலன், நிதி செயலாளர் எஸ் கணேசன், சிரேஷ்ட உப தலைவர் சி. பாஸ்கரா, இணை உப தலைவர் எம். சந்திரகுமார், இணை உப தலைவர் எஸ். சசி குமார், பிரசார செயலாளர் எம். பரணிதரன், மகளிர் விவகார செயலாளர் மஞ்சுளா பெருமாள், இளைஞர் விவகார செயலாளர் ஜி. விஷ்ணுகாந்த் ஆகிய பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து, எம். பால சுரேஷ் குமார், லோரன்ஸ் பெர்னாண்டோ, ஆர். கமலேஸ்வரன், எசக்கி குமார் ஜெயராமன், எம். பரமசிவம், எஸ். இருளப்பன், எஸ். பாலச்சந்திரன், எம். அன்டனி ஜெயசீலன் ஆகியோரும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வெடிபொருளை...

குறித்த இளைஞர் கிரைண்டர் மூலம் வெட்டியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அவரின் வீட்டை சூழவுள்ள பகுதிகளில் ஆபத்தான வெடிபொருட்களும் அவதானிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## முல்லைத்தீவு...

வும் தொடர்ந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வவுனியா மதகுவைத்த குளத்தை சேர்ந்த மனோகரன் தனுசன் (வயது 27), மற்றும் சிவலிங்கம் சகிலன் (வயது -26), தோணிக்கல்லை சேர்ந்த விஜயகுமாரன் தர்சன் (வயது 26) ஆகியோர் நேற்று முல்லைத்தீவுக்கு சுற்றுலாவாக வந்தனர்.

இவ்வாறு சுற்றுலா வந்த இளைஞர்கள் புதுக்குடியிருப்பை சேர்ந்த நண்பி ஒருவருடன் மணல்குடியிருப்பு கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

அவர்கள் கடலில் நீராடிய போது அவர்களை அலை அடித்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. நீண்டநேரமாகியும் நண்பர்களை காணாததால், அந்தப் பெண் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளார்.

அங்கு வந்த பொலிஸார், கடற்படையினரின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நீண்ட தேடுதலின் பின்னர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மற்றைய இருவரையும் கடற்படையினர் நேற்றிரவும் தொடர்ச்சியாக தேடினர்.

மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 21 பேர்...

30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும், 60 வயதுக்கு மேற்பட்ட 11 ஆண்களும், 7 பெண்களுமாக 18 பேரும் என 21 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 461ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## இந்தியாவிடம்...

யாவிடம் இருந்து மேலும் 140 கோடி அமெரிக்க டொலரை பரிமாற்று முறைமையின் கீழ் பெறத் திட்டமிட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி தற்போது இந்தியாவால் வழங்கப்படவுள்ள 50 கோடி அமெரிக்க டொலருக்கான கடன் ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக பெறப்படவுள்ளது.

இதற்கமைய, குறித்த 140 கோடி அமெரிக்க டொலர் கடன் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த பேச்சு நிறைவடைந்தவுடன் அதன் விதிமுறைகள் அறிவிக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்து...

கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் என்பதால் நான் புலிகளை ஆதரிக்கவில்லை. சிங்கள் - பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகக் கூடிய ஒரு தேசிய இனமாக தமிழர்கள் இருப்பதாலேயே நான் புலிகளை ஆதரிக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக தமிழ் இந்து சிறுபான்மை வாதம் என்றே வைத்திருக்க வேண்டும். சிங்களத்துக்கு எதிராக தமிழ், பௌத்ததுக்கு எதிராக இந்து, பேரினவாதத்துக்கு எதிராக சிறுபான்மை வாதம் என்கிற அரசியலையே புலிகள் கையில் எடுத்திருக்க வேண்டும்.

ஆனால், எந்த இடத்திலும் இந்துக்கள் தாக்கப்படுகிறோம் என பிரபாகரன் கூறவில்லை. மாறாக தமிழ்த் தேசிய இனம் ஒடுக்கப்படுகிறது என்றே பிரபாகரன் கூறினார். மறந்தும்கூட பிரபாகரன் தங்களை இந்துகள் என்கிற அடையாளத்துக்குள் சிக்கிக்கொள்ளவில்லை - என்றும் கூறினார். (ஐ)

## அந்தியேட்டி நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### சின்னையா இராசபூபதி

இன்று நீங்கள்
இயற்கையோடு கலந்து விட்டீர் – என்றும்
இறைவனாக எங்கள்
இதயங்களின் வாழ்வீர்கள்
வணங்குகிறோம், கண்ணீருடன்....

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று காலை 5.00 மணிக்கு கீரிமலையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் (ஏழாலை) கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து மதிய போசன நிகழ்வு இடம்பெறும்.

சிவகுரு வீதி,
ஏழாலை மத்தி
ஏழாலை.

தகவல்:
குமரகுருபரன்
கிருபாகரன்

## மரண அறிவித்தல்

மலர்வு
10 - 05 - 1952



உதிர்வு
04 - 12 - 2021

### சுப்பையா ஈஸ்வரன்

குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஈஸ்வரன் நேற்றுமுன்தினம் (04.12.2021) சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ரதியின் அன்புக் கணவரும், லீலாவதி, லலிதாவதி (குளமங்கால்), மாலாவதி (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவசங்கர், சிவப்பிரியா, கவிதா, உமாசங்கர், சுரேக்கா, ராஜிசங்கர், ஜனசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஜிதா, யோகேஸ்வரன் (பாலன்), ஜெயரூபி (இணுவில்), கஜேந்திரன் (உடுவில்), மிகிர்ணன் (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லாவண்யா, பார்நிக்கா, விதுர்சன், தர்சனா, லதுசனா, சந்தோஷ், நிறோயன், கவின்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2021) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் அளுக்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குளமங்கால், மல்லாகம்**
**தொ.பே. இல. 077 539 0661**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 586 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்!

கொழும்பு, டிசெ. 06

நாட்டில் மேலும் 586 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்தத் தொற்றாளர்கள் அனைவரும் நாடுமுழுவதும் நேற்று நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனைகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே வெளியானது.

இதனால், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 567,522 அதிகரித்துள்ளது.

## ஒமைக்ரோனை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை



கண்டி, டிசெ. 06

கோவிட்-19 இன் ஆபத்தான ஒமைக்ரோன் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

புதிய மாறுபாடு குறித்து நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பார்கள்.

முடக்கல் நிலைக்கு செல்லாதிருக்க மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 06

போர்க்காலத்தின்போது முல்லைத்தீவு, அம் பலவன் பொக்கணைப் பகுதியில் புதைக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏ.கே. 47 துப்பாக்கி, மகசின்கள் - 4 மற்றும் துப்பாக்கி ரவைகள் 210 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவை, நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டு, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட் டுள்ளன.

மனிதக் கொலை மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரி வின் கீழ் உள்ள பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. (இ)

## கல்வி tv CHANNEL-1

**06.12.2021 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**06.12.2021 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු
06.12.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 20

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## இந்திய தூதரகத்தின் கவனத்திற்கு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறுவதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த சந்திப்பு தற்போது பிற்போடப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாகவே குறித்த சந்திப்பு பிற்போடப்பட்டிருக்கின்றது. இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பது சாதாரணமானதொரு விடயமல்ல. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்ற நிலையில், கூட்டமைப்பின் புதுடில்லி விஜயம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆனால், சம்பந்தன் இவ்வாறானதொரு சந்திப்பையே தவிர்த்திருக்கின்றார். இந்திய பிரதமருடனான சந்திப்பை பிற்போடும் சம்பந்தன் மறுபுறம் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபயவிடம் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோருகின்றார்.

இந்த சந்திப்பு ஏன் பிற்போடப்பட்டது. தமிழ் பேச்சு வழக்கில் ஒரு சொற்றொடருண்டு. அதாவது, ‘உப்புச்சப்பிலாத விசயம்’. சம்பந்தன் இந்திய தூதரகத்திற்கு கூறியிருக்கும் காரணங்களும் அப்படியான உப்புச்சப்பில்லாத காரணங்கள்தான். அதாவது, அவைகள் உண்மையான காரணங்கள் அல்ல. ஆனால், காரணங்கள் போன்று காட்டப்பட்டிருக்கின்றன. கடவுச்சீட்டு காலாவதியாகிவிட்டது - புதுப்பிக்க வேண்டும், மாவையின் மகனின் திருமணம் இருக்கின்றது - இதனால் அவரால் இந்த சந்திப்பில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. பாதீடு தொடர்பான பாராளுமன்ற விவாதம் இருக்கின்றது - ஒரு பிராந்திய சக்தியின் பிரதமரை சந்திப்பதை தவிர்ப்பதற்காக சம்பந்தன் கூறியிருக்கும் காரணங்கள்தான் இவைகள். இப்படியான காரணங்களை முன்வைத்து பிரதமருடனான சந்திப்புக்கு பிறிதொரு நேரத்தை ஒதுக்கித்தருமாறு கேட்பது உண்மையிலேயே இந்திய பிரதமரை அவமானப்படுத்தும் ஒரு செயலாகும்.

இந்திய பிரதமருக்கு ஒரு கோரிக்கையை முன்வைப்பது தொடர்பில் - கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் யாழ்பாணத்தில் கூடி ஆராய்ந்திருந்தன. ஆனால், இந்த சந்திப்பில் சம்பந்தன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசு கட்சி பங்குகொள்ளவில்லை. இதில், முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் பங்குகொண்டு தங்களின் ஆதரவை வழங்கியிருந்தன. ஆனால், இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சம்பந்தன் இந்திய பிரதமருடனான சந்திப்பை பிற்போட்டியிருக்கின்றார்.

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஒருமுறைகூட புதுடில்லிக்கு பயணம் செய்திருக்கவில்லை. புதுடில்லிக்கு சென்று கலந்துரையாடும் கோரிக்கைகளை பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முன்வைத்தபோது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். இப்போது புதுடில்லிக்கு சென்றால் அது தென்னிலங்கையில் பதற்றங்களை அதிகரிக்கும் - அது எங்களின் புதிய அரசியல் யாப்பு முயற்சியைப் பாதிக்கும் - என்றவாறான காரணத்தை சம்பந்தன் கூறியிருந்தார். அப்போது சம்பந்தன் கூறியதை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில், புதிய அரசியல் யாப்பு தொடர்பில் ரணில் - மைத்திரி அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், இப்போது சம்பந்தன் தயங்குவதற்கு பின்னால் எந்தவொரு தர்க்கரீதியான காரணங்களும் இல்லை. அவ்வாறாயின் ராஜபக்ஷக்களின் புதிய அரசியல் யாப்பு முயற்சியின்மீதும் சம்பந்தன் நம்பிக்கை வைத்திருக்கின்றாரா?

கிடைக்கும் தகவல்களின்படி, மாகாண சபை முறைமையை நீக்கும் பரிந்துரையுடன்தான் புதிய அரசியல் யாப்பு தொடர்பான உத்தேச வரைபு முன்வைக்கப்படலாம். இவ்வாறானதொரு நிலையில், இந்தியா ஒன்றினால்தான் மாகாண சபை முறைமை தொடர்பில் பேச முடியும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் அதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. இந்தியாவும் இதனை தொடர்ந்து வலியுறுத்திவருகின்றது. ஆனால், சம்பந்தனோ பிறிதொரு கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றார். இதன் ஆபத்தை உணர்ந்து கொள்ளாமல் பங்காளிக் கட்சிகளும் வழமைபோல் சம்பந்தனை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. சம்பந்தன் வராவிட்டால், ஏனையவர்களை உள்ளடக்கிய கூட்டமைப்பின் குழுவினர் புதுடில்லிக்கு செல்வதே சரியானது. இதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலேயே இந்திய தூதரகம் கவனம் செலுத்த வேண்டும். சம்பந்தனின் இந்த நடவடிக்கை இந்திய தூதரகத்தின் முகத்தில் கரிபூசும் ஒரு செயலாகும்.

# வடக்கு - கிழக்கு மக்கள் விழிப்படைய வேண்டிய தருணம் !

அலசுவது இராஜதந்திரி

எதிர்வரும் தேர்தல் காலங்களை எதிர்கொள்ளும் விதத்தில் தம்மை தயார் செய்யும் பொருட்டு தென்னிலங்கையின் அரசியல் புள்ளிகள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன் வெளிப்பாடாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் பயணம் செய்து அரசியல் கள நிலவரங்களை ஆராய்ந்திருந்தார்.

தென்னிலங்கையிலிருந்து வருகின்ற அரசியல்வாதிகள் தொடர்பாக மட்டுமல்ல. வடக்கு - கிழக்கின் அரசியல்வாதிகள் தொடர்பாகவும் இவ்விரு மாகாணங்களினதும் மக்கள் விழிப்படைய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

எழுபதுகளில் தேர்தல் பிரசாரங்களின்போது வடக்கு - கிழக்கில் மக்களின் பேராதரவைப் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரங்களின்போது கூறிவந்த பிரபலமான தேர்தல் பிரசார கோஷமே “மரம் பழுத்தால் வெளவால் வரும்“ என்பதாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி குறிப்பிட்டது போல மரமும் பழுத்தது. வெளவாலும் வந்தது. ஆனால், வந்த வெளவால்கள் எல்லாம் அழிவின் மேல் அழிவை ஏற்படுத்தினவே தவிர, வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான தேடல் என்பது ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

முன்னாள் அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் உறுப்பினருமான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்தார்.

இன்றைய ஆட்சியாளர்கள் தமது அரசியல் எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதை நன்கறிந்து வைத்திருப்பர்களென்றே அறிய முடியும். தற்போதைய ஆட்சியாளர்கள் தொடர்பாக தாம் நம்பி மோசம்போன நிலையிலேயே நாட்டு மக்கள் காணப்படுகின்றார்கள்.

வடக்கு - கிழக்கின் ஆயுதப் போரில் இன்றைய ஆட்சியாளர்கள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், போர் வெற்றி மூலம் மக்களை கவர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது அரசியல் ரீதியான சவால்களையும் பொருளாதார ரீதியான சவால்களையும் கையாள முடியாது தோல்வி மேல் தோல்விகளைத்தழுவி வருகின்றனர்.

நாட்டு மக்கள் எப்போது இன்றைய ஆட்சியை மாற்ற முடியும் என்று தருணம் பார்த்து வருகின்றனர். அரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் கட்சிகளே ஆட்சி பீடத்தில் இருப்போர் தொடர்பாக அதிருப்தி கொண்டுள்ளனர்.

இதுதவிர, வடக்குக்கு விஜயம் செய்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) உறுப்பினரான விஜித ஹேரத்கூட இன்றைய அரசாங்கத்தை விரட்டியடிக்கும் தருணத்தை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சியென்ற போர்வையில் ஒர் ‘இராணுவ ஆட்சி’யே இடம்பெற்று வருவதாக நாட்டு மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.

இரு வருடங்களுக்கு முன்னர் இன்றைய ஆட்சி, பதவிக்கு வந்தபோது இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றோர் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். மக்களால் தெரிவு செய்யப்பட்டோர் பெயரளவில் மட்டுமே அமைச்சரவை பதவிகளை வகிக்கின்றனரே தவிர, அவர்கள் ‘பொம்மலாட்ட பொம்மைகள்’ போன்றே இருந்து வருகின்றனர்.


தென்னிலங்கை மக்கள் இன்றைய ஆட்சியாளர்கள் குறித்து அதிருப்தி கொண்டுள்ள அதேசமயம், ஏனைய தென்னிலங்கை அரசியல் கட்சிகள் குறித்தும் நன்கறிந்தே வைத்துள்ளனர். தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும் எதிர்கால அரசியல் நவடிக்கைகளை பலப்படுத்தவுமென தற்போது களத்தில் இறங்கியுள்ளனர். இதன் ஒரு பகுதியாகவே அவர்கள் வடக்கு - கிழக்கு மக்களையும் குறிவைத்து இந்த மாகாணங்களுக்கு பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையின் கடந்த கால தேர்தல்களை நோக்கும்போது வடக்கு - கிழக்கு மக்களே அரசாங்கங்களை நிர்ணயிக்கும் சக்தியாக இருந்துள்ளனர். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் கொண்டிருந்த ஆளுமைக்கு சவால்விடும் விதத்திலும் அவர்களது வாக்குப்பலத்தை கொச்சைப்படுத்தும் விதத்திலுமே கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு இன்றைய ஜனாதிபதி பதவிக்கு வந்திருந்தார்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன தாம் வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற்றிராது விட்டிருந்தால் பெரும் உயிராபத்தைகூட சந்தித்திருக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது வடக்கு - கிழக்கு மக்களை இலக்கு வைத்து மீண்டும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். இது விடயத்தில் முன்பு செய்த தவறுகளை வடக்கு - கிழக்கு மக்கள் மீளவும் செய்துவிடாது விழிப்புடன் தமது அரசியல் நடவடிக்கைகள் குறித்து இருக்க வேண்டியவர்களாகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
மற்றவர் பணியை நீங்களே செய்ய வேண்டிய சூழ் நிலை இன்று அமையும். மாணவர்களுக்கு உதவி செய்து பாராட்டு பெறுவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். முன்பிருந்த மனக்குறைகள் தீரும்.

**இடபம்**
பணியாளர்களின் பிரச்னைகளுக்கு இன்று தீர்வு கிடைக்கும். பிறர் விஷயங்களில் அறிவுரை சொல் லாமல் இருப்பது நல்லது. மனஅழுத்தம் வந்து நீங்கும். குடும்பத்தில் திருமணம் முடிவாகும்.

**மிதுனம்**
உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம் தேவை. பயணத்தால் சிறிய நன்மை கிடைக்கும். வருமானம் பெருகும். உறவினர்களின் உதவி கிடைக்கும். சிக்கல் ஒன்று தீரும்.

**கடகம்**
குடும்பம் மகிழும். வியாபார முயற்சி ஒன்று நற்பல னைத் தரும். புதிய திட்டங்களை கவனமாகத் தீட்ட வேண்டும். நட்பு வட்டம் விரியும். மனதில் தைரி யம் அதிகரிக்கும். அன்பு கிடைக்கும்.

**சிம்மம்**
வெளிநாட்டில் இருந்து வருமானம் வர இன்று அதி கம் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். புது வேலை கிடைக்கும். உற்சாகமான மனநிலையில் இருப்பீர்கள்.

**கன்னி**
எதையாவது கற்பனை செய்து வீண் குழப்பம் அடை யாதீர்கள். அலுவலக வேலைகளில் கவனமாக இருப்பது மிகவும் அவசியம். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கவலை ஒன்று நீங்கும்.

**துலாம்**
திறம்பட பணி செய்து மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். சொத்து வாங்க செய்த முயற்சிகள் உங்களின் விருப்பப்படி நிறைவேறும். திருமணம் பற்றிய பேச்சுக்கள் நல்லபடியாக முடியும்.

**விருட்சிகம்**
உங்கள் வேலையை வேறு ஒருவரிடம் ஒப்ப டைக்காதீர்கள். அடுத்தவர்களை நம்பி உங்களது பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம். எதிர்பாராதபடி நல்ல செய்தி ஒன்று வெளிநாட்டில் இருந்து வரும்.

**தனுசு**
தடைப்பட்ட சுபவிஷயங்கள் இன்று நடக்க ஏற்பாடாகி நிம்மதி தரும். எதிர்பார்த்த பணம் வரும். தர்ம செயல்கள் செய்வீர்கள். பயம் நீங்கும். மனக்கசப் புக்கள் அகலும். குடும்பத்தில் குதூகலம் நிறையும்.

**மகரம்**
நல்ல காரணங்களுக்காக இன்று பணம் செல வழியும். கலகலப்பான சூழலை அனுபவிப்பீர்கள். உங்களின் குறை ஒன்று தீரும். குடும்பத்தினருடன் புரிதல் அதிகமாகும். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

**கும்பம்**
வாழ்க்கைத்துணையின் உடல் நலனில் சிறு பிரச்னை ஏற்பட்டு சரியாகும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைத்து கலகலப்பு கூடும். சிறு கவலை ஒன்று தீரும். மனநிம்மதி அதிகரிக்கும்.

**மீனம்**
உங்களின் கலகலப்பான சுபாவம் காரணமாக நட்பு வட்டம் விரியும். குழப்பங்கள் அகலும். கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள். பணியாளர்கள் புதியவர்களிடம் எச்சரிக்கையாக இருந்தால் நல்லது.

# தமிழக மக்களை இனியும் ஏமாற்ற விடமாட்டோம்

## ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி, பன்னீர் சபதம்

சென்னை, டிசெ 06

தமிழக முன்னாள் முதல மைச்சர் ஜெயலலிதாவின் ஐந் தாவது நினைவுதினத்தை முன் னிட்டு அவரது நினைவிடத் தில் நேற்று ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ். மலர்தூவி மரியாதை செலுத் தினர். அங்கு அவர்கள், "அம்மா உணவகம், அம்மா மருந்தகம் திட்டங்களை நிறுத்துவோரின் கொட்டங்கள் அடக்கப்படும், நீட் தேர்வு இரத்து, கல்விக்கடன் ரத்து என்று பொய் வாக்குறுதிய ளித்த முதலமைச்சர், இனியும் தமிழர்களை ஏமாற்ற விடமாட் டோம்" என்று உறுதிமொழி எடுத்தனர்.

தமிழக அரசியலில் இரும்பு பெண்மணியாக உலா வந்த மறைந்த முதலமைச்சர்



ஜெயலலிதா உடல்நலக்குறை வால் பாதிக்கப்பட்டு கடந்த 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி சென்னையில் உள்ள அப்போலோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டார்.

தொடர்ந்து, 74 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 2016 டிசெம்பர் 5 ஆம் திகதி ஜெயலலிதா தனது 68 வயதில் உயிரிழந்தார். நேற்று மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு சென்னை மெரீனா கடற்கரை யில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங் கிணைப்பாளர் எடப்பாடி பழ னிசாமி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். அவர்களை தொடர்ந்து அ.தி. மு.கவின் மூத்த தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், நிர்வா கிகள், உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

# அ.தி.மு.க. தொண்டர்கள்மீது தாக்குதல் நடத்தப்படுவதை பொறுக்க முடியாது

## சசிகலா எச்சரிக்கை



சென்னை, டிசெ. 06

அ.தி.மு.க. தொண்டர்கள் மீது தாக்குதல் நடத்துவதை இனியும் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்று சசிகலா நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து சசிகலா வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறப் பட்டிருப்பதாவது:-

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர்களுக்கான ஓர் இயக்கமாகவும் ஏழை எளிய மக்களுக்கான ஓர் இயக்க மாகவும் இரும்பெரும் தலை வர்களின் தலைமையில் செயல்பட்டு வந்தது. நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைபடும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கத்தின் இன்றைய நிகழ்வுகளைப் பார்க்கும்போது ஒவ்வொரு தொண்டனும் வெட்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

என்றைக்கு நம் புரட்சித் தலைவி நம்மை விட்டு சென்றார்களோ அன்று முதல் இன்று வரை நம் இயக்கத்தில் நடைபெறும் செயல்களை பார்க்கும்போது என் மனது மிகவும் வேதனைப்படுகிறது. எந்த ஓர் இயக்கமாக இருந்தா லும் தொண்டர்களை மதித்து அவர்களுடைய நலனில் அக் கறை காட்டும்போது தான் அதை பார்க்கும் மற்றவர்க ளுக்கும் அந்த இயக்கத்தின் மீது ஒரு நல்ல எண்ணமும் நம்பிக் கையும் வரும் எந்த ஒரு இயக்கத்திற்கும் கொடி பிடிக் கும் தொண்டர்கள்தான் தேவையே ஒழிய தடி எடுக்கும் குண்டர்கள் அல்ல.

தொண்டர்கள் மீது விழும் ஒவ்வொரு அடியும் ஒட்டு மொத்த கழக உடன்பிறப்புகளின் மீது விழுந்த அடியாகவும் என் மீது விழுந்த அடியாகவும்தான் நான் நினைக்கிறேன். ஒரு தலைமை யால்தான் அந்த வலியை உணர முடியும். ஆணிவேரான தொண்டர்கள் இருந்தால்தான் இந்த இயக்கம் ஆலமரமாக தழைத்தோங்கும். இதை ஒவ் வொருவரும் மனதில் வைத்து, நம் தலைவர்கள் காட்டிய வழி யில் ஒற்றுமையுடன் இருந்தால் தான் வரும் நாட்களில் நம் எதிரிகளை வெல்ல முடியும் என்பதன் அவசியத்தை உணர வேண்டும்" என சசிகலா தெரிவித்துள்ளார்.

# சுயநலவாதிகளின் பிடியிலிருந்து அ.தி.மு.கவை மீட்டெடுப்போம்

## தினகரன் அறிவிப்பு




சென்னை, டிசெ 06

"எம். ஜி. ஆரால் உருவாக் கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டி காக்கப்பட்ட அ.தி.மு.க. ஒரு சிலரின் சுயநலத்தால் தன் தனித்தன்மையையும், அடை யாளத்தையும் இழந்துவிட்ட நிலையில், நம் தலைவர்களின் லட்சியங்களை மீட்போம். அ.தி.மு.கவை அவர்களிட மிருந்து மீட்டெடுப்போம்" என அமமுக பொதுச் செயலாளர் தினகரன் நேற்று அறிவித்தார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவுத் தினம் நேற்று அனுசரிக்கப்பட் டது.அதனைமுன்னிட்டு ஜெய லலிதா நினைவிடத்தில் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் நேற்று அஞ் சலி செலுத்தினார்.

இதுகுறித்து அமமுக கட்சி நிர்வாகம் வெளியிட்ட அறிவிப் பில், "தீயசக்திகளிடமிருந்து அன்னை தமிழகத்தைக் காத்திட, நம் எம். ஜி ஆரால் உருவாக்கப்பட்டு, நம் முன் னாள் முதல்வர் ஜெயலலிதா வால் கட்டி காக்கப்பட்ட இயக்கம், ஒரு சிலரின் சுயநலத் தால் தன் தனித்தன்மையையும், அடையாளத்தையும் இழந்து விட்ட நிலையில், நம் தலைவர் களின் இலட்சியங்களை "அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்" எனும் ஜனநாயக ஆயுதம் கொண்டு மீட்டெடுத்தே தீரு வோம் என முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடத்தில் கழக நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றனர்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

எம். ஜி. ஆரால் உருவாக்கப் பட்டு, ஜெயலலிதாவால் கட்டி காக்கப்பட்ட அ.தி.மு.க. ஒரு சிலரின் சுயநலத்தால் தன் தனித்தன்மையையும், அடை யாளத்தையும் இழந்துவிட்ட நிலையில், நம் தலைவர்களின் லட்சியங்களை மீட்போம். அ.தி.மு.க. வை அவர்களிட மிருந்து மீட்டெடுப்போம்" என அ.ம.மு.க. பொதுச் செயலாளர் தினகரன் நேற்று அறிவித்தார்.



## ஆறுமுகநாவலரின் நினைவுதினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, டிசெ. 06

சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலரின் நினைவுநாள் நிகழ்வு வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள அவரின் சிலையடியில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் உபநகரபிதா சு.குமாரசாமி தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதன்போது நாவலரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அடிகளார் தொடர்பான சிறப்புரையை தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான க. சந்திரகுலசிங்கம், நா. சேனாதிராஜா, சுமந்திரன், சு. காண்டீபன், உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் கு.நந்தகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆளுநர் அலுவலகத்துக்குள் எம்மை நிர்ப்பந்தித்தார்கள்!

### இ. போ. சபையினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 06

**வடக்கு ஆளுநர் அலுவலகத்திற்குள் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று இலங்கை போக்குவரத்து சபை தொழில்சங்க பிரதிநிதி கள் தெரிவித்துள்ளனர். தனது முடிவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் கலந்துரையாடல் மண்டபத்தை விட்டு வெளியேற முடியாதென ஆளுநர் குறிப்பிட்டாரெனத் தொழில்சங்க பிரதிநிதிகள் கூறினர்.**

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தூர சேவை பேருந்துகளை இயக்குவது தொடர்பிலான சர்ச்சை பற்றி கலந்துரையாட இ. போ. ச கோரியிருந்தது. இதன்படி, வடக்கு ஆளுநர் அலுவலகத்திற்கு நேற்று இ. போ. சபை பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இ. போ. ச வட பிராந்திய முகாமையாளர், 7 சாலை முகாமையாளர்கள், தனியார் போக்குவரத்து சபையினர், நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதிகள், யாழ். மாநகர சபை முதல்வர் உள்ளிட்டவர்கள் நேற்றைய கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆளுநர் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடந்தது.

கலந்துரையாடலின் போது, இ. போ. ச. தொழிற்சங்கத்தினர் கூறிய கருத்துக்களை செவிமடுத்த பின்னர் ஆளுநர் தடாலடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். "புதிய பேருந்து நிலையத்தில் இ. போ. ச., தனியார் சேவையை ஒன்றிணைந்து மேற்கொள்ளுமாறு ஆளுநர் உத்தரவிட்டார்.

எனினும், எமது தரப்பு கருத்தை தெரிவித்து, அப்படி ஒன்றிணைந்து சேவையை மேற்கொள்ள முடியாதென தொழில்சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதனால், கோபமடைந்த ஆளுநர், தனது உத்தரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், உங்களை வேலையை விட்டு கலைப்பேன் என்றும், தனது உத்தரவை ஏற்றுக்கொள்ளும்வரை அந்த மண்டபத்தை விட்டு வெளியேற முடியாதென உத்தரவிட்டுவிட்டு வெளியேறிச் சென்றாரென தொழிற்சங்க பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இ. போ. சவினர் மட்டும் அந்த மண்டபத்தில் உட்கார வைக்கப்பட்டிருந்தனரெனவும் யாழ். மாநகர சபை முதல்வருடன் பேசி முடிவெடுக்கும்படி ஆளுநர் கூறிவிட்டு சென்றாரெனவும் தெரிவித்தனர்.

பின்னர் முதல்வருடன் கலந்துரையாடல் நடத்திய போதும், தமது முடிவில் உறுதியாக இருந்தனர் என்றும் சிறிது நேரத்தின் பின்னர், தாம் வெளியேறலாமென முதல்வர் தெரிவித்தாரென்றும் இ. போ.சவினர் கூறினர். (ஐ - 2)



## முல்லைத்தீவில் கும்பல் அடாவடி; இரு சிறுமிகளுடன் ஐவர் படுகாயம்!

முல்லைத்தீவு, டிசெ. 06

பெண்கள் இருந்த வீட்டுக்குள் மின்சாரம் தடைப்பட்ட நேரம் புகுந்த கும்பல் நடத்திய தாக்குதலில் ஐவர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு - சிலாவத்தை - தீர்த்தக்கரை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த இரு பெண்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வெள்ளிக்கிழமை இரவு மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரம் 7 பேர் கொண்ட கும்பல் அந்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்த பொருட்கள் மீது தாக்குதல் நடத்தியது. இவர்களின் தாக்குதலில் அங்கிருந்த வயதான பெண் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

இதன் பின்னர் 16 வயது சிறுமியை வீட்டின் வெளியே இந்தக் கும்பல் இழுத்துச் செல்ல முயன்றபோது 13 வயது சிறுமி அவர்கள் மீது மிளகாய்த் தூளை வீசி தனது சகோதரியை காப்பாற்றினார்.

வீட்டிலிருந்தவர்கள் அவசர நோயாளர் பிரிவுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம் அங்கு வந்த அம்புலன்ஸ் காயமடைந்தவர்களை முல்லைத்தீவு மருத்துவமனைக்கு கொண்டு சென்றது. இதில் படுகாயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 119 பொலிஸ் சேவையினருக்கு தகவல் அளித்தபோதும், குறித்த கும்பல்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இது விடயத்தில் உரியவர்கள் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களும் அந்தப் பகுதி மக்களும் தெரிவித்தனர். (ஐ)

## புதிய பஸ் நிலையத்துக்கு வரமாட்டோம் என இ. போ. சபை விடாப்பிடியாக உள்ளது

### யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், டிசெ. 06

புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திற்கு தாம் ஒருபோதும் வர மாட்டோமென இலங்கை போக்குவரத்து சபை விடாப்பிடியாக நின்ற காரணத்தால் நேற்றைய கூட்டம் எந்தவித முடிவுமின்றி நிறைவுக்கு வந்ததாக யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான பேருந்து நிலையம் ஒன்று இ. போ. ச மத்திய பேருந்து நிலையத்திற்கு அண்மையாக புதிதாக அமைக்கப்பட்டது. ஆனாலும் அங்கிருந்து தாம் சேவையில் ஈடுபடமாட்டோம் என இலங்கை போக்குவரத்து சபை மறுத்து வருகிறது.

இந்நிலையில் இ. போ. ச அங்கிருந்து சேவையில் ஈடுபட்டால் மாத்திரமே நாமும் அங்கிருந்து சேவையில் ஈடுபடுவோம் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. அதனால் புதிய நெடுந்தூர பேருந்து நிலையம் பயன்பாடு இல்லாமல் காணப்படுகிறது.

இந்நிலையில், இந்தப் பிரச்னை தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று கூட்டமொன்று இடம்பெற்றது. கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களை சந்தித்த போதே முதல்வர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். (ஐ)

## இந்தியரின் சாரதி பத்திரம் நேற்று கரையொதுங்கியது!

வடமராட்சி, டிசெ. 06

இந்திய பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரைபகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கரையொதுங்கியது.

தமிழகத்தின் ஆலம்பத்தூர் சிதம்பரம் தாலுகாவை சேர்ந்த ஆனந்தகுமார் பரமசிவம் (வயது 47) என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரமே இவ்வாறு கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

அண்மையில், யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதியில் 6 சடலங்கள் கரையொதுங்கியிருந்தன. இவற்றில் 5 சடலங்கள் வடமராட்சியிலேயே கரையொதுங்கின. இந்த நிலையிலேயே நேற்றைய தினம் சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்றும் கரையொதுங்கியது. (ஐ)



## முல்லைத்தீவு மருத்துவமனைக்கு சுகாதார பொருட்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 06

இலங்கை ஹோட்டல் பட்டதாரிகளின் சங்க உறுப்பினர்களின் அனுசரணையுடன், முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால், ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு சுகாதாரப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க சார்பில், 64ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் உபுல் வீரகோன் வைத்தியசாலைக்கு சென்று இவற்றைக் கையளித்தார்.

மெத்தைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், துடைப்பான் மற்றும் ஆடைகள் என்பன இவற்றில் உள்ளடங்கியிருந்தன. (ஐ)

# மன்னாரில் எரிவாயு அடுப்பு தீப்பற்றி எரிந்து வெடித்தது!

மன்னார், டிசெ. 06

மன்னார் சாந்திபுரம் பகுதியில் வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் எரிவாயு அடுப்பு தீப்பற்றி எரிந்துள்ளது.

கடந்த வாரம் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர் அடுப்புடன் இணைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திடீரென அடுப்பில் பரவிய தீயை அடுத்து இணைக்கப்பட்டிருந்த சிலிண்டரை உடனடியாக அகற்றியமையால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டதாக அந்த வீட்டினர் தெரிவித்தனர்.

இதேசமயம் தீப்பற்றிய வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டரிலோ, ரெகுலேட்டர்களிலோ, வயர்களிலோ எந்தத் தீ பரவலும் ஏற்படவில்லை என்பதுடன் அடுப்பு மட்டுமே தீ பற்றி எரிந்ததுடன் வெடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்திரகுமாரை சந்தித்தார் சம்பிக்க ரணவக்க எம். பி.!

கிளிநொச்சி, டிசெ. 06

நேற்று கிளிநொச்சி வந்த சம்பிக்க ரணவக்க எம். பி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பில் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் இடம்பெற்றது. இதன்போது குறித்த கலந்துரையாடல் தொடர்பில் செய்தி அறிக்கையிடுவதற்கு ஊடகங்களிற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் உடனடியாகத் தெரியவர வில்லை. (ஐ)

# கிளிநொச்சி மக்களுடன் சம்பிக்க நேற்று சந்திப்பு

கிளிநொச்சி, டிசெ. 06

**43 இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் மக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.**

கிளிநொச்சி, பரந்தனின் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார்.

மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் குறிப்பாக பசளை, வீடு உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பில் அவரிடம் கருத்து முன்வைத்தனர்.

அவற்றுக்குப் பதிலளித்த சம்பிக்க, குறித்த பிரச்னைகள் தொட்பில் எழுத்து மூலமாகத் தருமாறும், அதற்குப் பொருத்த மானவர்களுக்குத் தகவலை வழங்கி, தீர்வு பெற்றுத் தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது பரந்தன் - சிவபுரம் பகுதிக்கும் சென்ற சம்பிக்க எம். பி. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் நேரில் பார்வையிட்டார்.

சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இதன்போது அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்களை ஆரம்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# முஸ்லிம்களின் விடயத்தில் பலவற்றை புரிந்துகொண்டேன்!

## கல்முனையில் ஞானசார தேரர்

அக்கரைப்பற்று, டிசெ. 06

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலை வருமான கலகொடை அத்தே ஞானசார தேரர் சனிக்கிழமை இரவு கல்முனை பகுதியில் அமைந்துள்ள இரு வேறு இடங்களிற்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் விஜயம் மேற்கொண்டார்.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் மக்கள் கருத்தறியும் செயலமர்வுகள் கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற நிலையில் நேற்றுமுன்தினம் மாலை இவர் தலைமையிலான குழுவினர் கல்முனை பகுதிகளுக்கு விஜயம் செய்தனர் .

இதன்போது கல்முனை தாருஸ்ஸபா நிறுவனத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த இக்குழுவினர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்முனை முஸ்லிம் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இதன் போது கல்முனை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் உட்பட சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன் போது கல்முனையின் சமகாலத்தேவைகள் பற்றிய மகஜரொன்றும் இவரிடம் கையளிக்கப்பட்டதுடன் நினைவுச்சின்னமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

எனினும், அங்கு ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர், அங்கிருந்து வெளியேறிய ஞானசார தேரரை இடைமறித்து ஊடகவியலாளர்கள் விஜயத்தின் நோக்கம் தொடர்பில் வினவினர்.



இதன் போது ஊடகங்கள் மக்களிடம் உண்மையான விடயங்களை அறிக்கையிட வேண்டும் எனவும் தவறான தகவல்களை பரப்பி சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார். முஸ்லிம்கள் விடயத்தில் பல்வேறு விடயங்களை தற்போது புரிந்து கொண்டுள்ளேன். இதனூடாக இனிவரும் காலங்களில் ஒரு நாடு ஒரே சட்டம் என்ற விடயதானத்தின் ஊடாக அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி குழுவில் வழங்கப்படும் பரிந்துரைக்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை கல்முனை கடற்கரைப்பள்ளி நாகூர் ஆண்டகை தர்காவுக்கும் சென்று அதனையும் பார்வையிட்டார். இந்நிகழ்வில் தாருஸ்ஸபா நிறுவனத்தின் தலைவர் மௌலவி ஸபானிஸ் உஸ்தாத் சபா முஹம்மத் ,ஜனாதிபதி செயலணி உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் முபிஸால் அபூபக்கர், ஞானசாரர் தேரர் மற்றும் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட பரிந்துரைக் குழுவினர் மற்றும் கல்முனை வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எம்.எம்.சித்தீக், மற்றும் வபா பாரூக், நசீர் ஹாஜியார். , உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# அமைச்சர் சமல் ராஜபக்ஷவை பிரிட்டன் தூதுவர் சந்தித்தார்!

கொழும்பு, டிசெ. 06

அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நவம்பரில் ஸ்கொட்லாந்தில் நடந்த கோப் 26 காலநிலை மாற்ற மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பல விடயங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தவிர எக்ஸ்பிரஸ் பேர்ல் பேரழிவை அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் சாத்தியமான சர்வதேச ஒத்துழைப்புகள், புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் தணிப்பு தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆசிய திட்டங்களை உருவாக்குதல், தாழ்நில ஈரநிலங்கள் மற்றும் அவற்றின் தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் விலங்கினங்களின் பாதுகாப்பு, எதிர்கால சுற்றுச்சூழல் பேரழிவுகளைத் தடுக்க நீண்ட கால காலநிலை மாற்ற முன்னறிவிப்புகள் மற்றும் உருவகப்படுத்துதல்களை செயல்படுத்துதல், விவசாயம், கட்டுமானம் மற்றும் வளர்ச்சி குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளும் எதிர்கால இருதரப்பு பணிகளுக்காக உத்தியோகபூர்வ மட்டத்தில் முன்னேறுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இக் கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகாரங்களின் தலைவர் மேத்யூ டெத், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி திருமதி தர்ஷனி லஹந்தபுர ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கடலில் மூழ்கிய இரு சிறுவர் பலி!

திருகோணமலை, டிசெ. 06

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறக்கண்டி பகுதியில் கடலில் நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் காலை நீரில் மூழ்கிய இரண்டு சிறுவர்களும் மீட்கப்பட்டு நிலாவெளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நிலாவெளி பகுதியைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடைய இரு சிறுவர்களே உயிரிழந்தனர். (ஐ)

# சித்திரை புத்தாண்டில் அரிசி ரூ. 250ஆக உயரும்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 06

மியன்மார் மாத்திரமல்ல, எந்த நாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தாலும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தின்போது உள்நாட்டு அரிசியின் விலை 250 ரூபாய் வரை அதிகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படுகின்ற டொலர் நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தை அன்றி சீனாவை நாடுவதால் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன் சமையல் எரிவாயு சிலிண்டரை அண்மித்த வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.(ஐ)

# யானை வெடியால் இளைஞனின் உயிரை பறித்த பிக்குவுக்கு மறியல்!

## வாழைச்சேனையில் கொடூர சம்பவம்

மட்டக்களப்பு, டிசெ. 06

**இளைஞனுக்கும் - பிக்குவுக்கும் ஏற்பட்ட தகராறில், யானைகளை விரட்டப் பயன்படும் வெடியை பிக்கு இளைஞனின் வயிற்றில் வைத்து கட்டியணைத்தவாறு வெடிக்கச் செய்தார். இதில் இளைஞன் உயிரிழக்க பிக்கு காயமடைந்தார்.**

இந்த சம்பவம் தொடர்பில் கைதான ஓமனியாமடு விகாராதிபதியை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் கடந்த இரண்டாம் திகதி மட்டக்களப்பு - வாழைச்சேனை - ஓமனியாமடுவில் இடம்பெற்றது.

ஓமனியாமடு விகாரதிபதிக்கும் அந்தப் பகுதியை சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து, விகாராதிபதி, யானைவெடியைக் கொளுத்தி, அதனை ஓர் இளைஞனின் வயிற்றில் வைத்துக் கட்டிப் பிடித்து வெடிக்க செய்தார்.

இதில், இளைஞர் உயிரிழக்க பிக்கு காயமடைந்தார். இந்த சம்பவத்தில் 27 வயதான ஹேரத் முதியன்செலாகே சிசிர குமார என்பவரே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பு - பதுளை வீதி தும்பாலஞ்சோலை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு காட்டு யானை தாக்கியதில் 6 பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானார்.

கனகன் முருகேசன் எனும் 60 வயது மதிக்கத்தக்க 6 பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு காட்டுயானை தாக்கி உயிரிழந்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யானை தாக்கி உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு உள்ளதுடன் குறித்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரயிலுடன் மோதுண்டு குடும்பஸ்தர் மரணம்!

மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் திராய்மடு, மூன்றாம் குறுக்குதெருவை சேர்ந்த 43 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான சேனாதிபதி அசோக்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணிக்கு சென்ற ரயிலுடன் மோதி உயிரிழந்தார் என்று பொலிஸாரின் முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## திருட்டு, போதை குற்றங்களுடன் தொடர்புடைய இருவருக்கு மறியல்!

அக்கரைப்பற்று, டிசெ. 06

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றங்களின் கீழ் கைதான இருவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எச். எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கைது செய்யப்பட்ட இந்த சந்தேகநபர்கள், அக்கரைப்பற்று நீதிமன்றின் கட்டளைக்கமைய மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது 3,320 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், அவர்களின் வாக்குமூலத்துக்கு அமைய 25 பவுண் தங்க நகைகள், திருட்டுக்கு பயன்படுத்திய ஒட்டோ மற்றும் திருடப்பட்ட 3 மோட்டார் சைக்கிள்கள் என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள், அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக் கோவில், ஆலையடிவேம்பு, கல்முனை மற்றும் காத்தான்குடி, களுவாஞ்சிகுடி, கரடியனாறு பிரதேசங்களில் இந்தத் திருட்டுக்களை புரிந்துள்ளனர் என்று கூறப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் போதைப் பொருக்குள் அடிமையானவர்களெனவும், இவர்கள் இறக்காமம், வாங் காமம் பிரதேசத்தை சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## வீதி மூடப்பட்டமைக்கு எதிராக மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்!

மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பு, கிரான் குளம், அமரபுரம் கிராமத்தில் 15 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த கிரான்குளம் - புதுக்குடியிருப்பு வீதியை இரண்டு மாதங்களாக பலவந்தமாக மூடி வைத்திருப்பதற்கு பொதுமக்கள் கடும் எதிர்த்துத் தெரிவித்துள்ளனர்.

அந்த வீதியைத் திறந்து, மக்களின் வீதிப் போக்குவரத்துக்கு வழி செய்யுமாறு, கிரான்குள பிரதான வீதியிலுள்ள ஸ்ரீமஹா விஷ்ணு கோயில் முன்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை பொதுமக்கள் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

காணி சீர்திருந்த ஆணைக் குழுவின் அதிகாரி விமல்ராஜ் என்பவரே மேற்படி வீதியை அடைத்து வைத்துள்ளார் எனவும் இதனால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பாதையை திறந்து தருமாறு கோரியும் அதே போன்று கடந்த 28ஆம் திகதி அன்று இந்தப் பிரதேசத்தில் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகவும் இந்த கண்டன கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அத்துடன்,"15 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த வீதியை அநியாயமாக மூடாதே", "காணித் திருடனுக்கு காணி ஆணையாளர் பதவியா?" மற்றும் "அரசே காணித் திருட்டு கும்பல்களை விசாரணை செய்" என்பன போன்ற வசனங்கள் எழுத்தப்பட்ட பதாதைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

இதில், பொதுமக்களுடன், மண்முனைப்பற்று தவிசாளர் டி. தயானந்தன் உட்பட மண்முனை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேநேரம், இவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக அந்தப் பகுதியிலேயே கிரான் குளம் கதிரவன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எமது விளையாட்டுக்கழக மைதானத்தை, எமது கழக உறுப்பினர்கள் விளையாடுவதற்காக மீட்பதற்காக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, மைதானத்தை எமக்குத் தரவேண்டும் என்றும் அரசியல் இலாபத்துக்காக பொது மக்களை அழைத்து வந்து தவிசாளர் ஆர்ப்பாட்டம் செய்கின்றார் என எதிர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அங்கு வருகை தந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயன சிறி, மேற்படி இரு ஆர்ப்பாட்டக்காரர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.(ஐ)

## கிழக்கில் அதிகரிக்கிறது தொற்று! சுகாதார விதிகளை பின்பற்றுங்கள்

### மக்களை கேட்கிறார் கிழக்கு சுகாதார பணிப்பாளர்

மட்டக்களப்பு, டிசெ. 06

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கோவிட் - 19 கொரோனா தொற்று அதிகரித்து வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்துள்ளார்

அதனடிப்படையில் கடந்த ஒக்டொபேர் மாதத்தில் குறைவடைந்திருந்த கோவிட் 19 நோயாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மாதத்தில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒக்ரோபர் மாதத்தில் சராசரியாக கிழமைக்கு 600 தொடக்கம் 650 என்று நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வந்த நிலையில் நவம்பர் இறுதி பகுதியில் கிழமைக்கு 1000 கோவிட் - 19 கொரோனா தொற்றாளர்கள் இனங்கான படுவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர். எம். தௌபீக் தெரிவித்தார்

அம்பாறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளதாகவும் மாதாந்தம் செய்யப்படும் ஆண்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் இங்கணப்படும் நோயாளர்களின் வீதம் அடிப்படையில் ஒப்பிடும்போது செப்டம்பரில் 31வீதமாகவும் ஒக்டோபர் மாதத்தில் 21வீதமாகவும் குறைவடைந்து இருந்தது இது நவம்பர் மாதத்தில் மீண்டும் 31வீதமாக அதிகரித்து உள்ளது இது டிசம்பர் மாதம் இறுதிக்குள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்த கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர். எம். தௌபீக்

சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டிலும் ஒமிக்ரோன் வகை கோவிட் வைரஸ் தொற்று இனங்கானப்பட்டுள்ளது இது வேகமாக பரவக்கூடியது என வும் இதனுடைய தாக்கத்தின் உடைய வேகமும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவும் மரணங்களின் வேகம் என்பன தொடர்பில் சரியான கணிப்புகள் இதுவரை கூறப்படவில்லை

எதிர்வரும் காலம் பண்டிகை காலம் என்பதினால் பொது மக்கள் தமக்கு தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் அடிக்கடி சொல்லப்படுகின்ற முக கவசத்தை சரியாக அணிந்து கொள்வதும்,சமூக இடைவெளிகளை பேணி, அடிக்கடி கைகளை கழுவிக் தற்பாதுகாப்புகளை எடுத்துக் கொள்வது அவசியமாகும். அத்தோடு அனாவசியமான பாதுகாப்பற்ற நெருக்கடியான ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும், விசேடமாக மரண வீடுகளில், மங்கள திருமண நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய ஆராதனைகள் என்பவற்றில் ஒன்று கூடுவதும், பண்டிகை காலங்களில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காக நெருக்கடியான முறையிலே ஒன்று கூடுவதும் இந்தக் கட்டங்களில் சுகாதார அமைச்சினால் அறிவுறுத்தப்படும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் எம்மை பாதுகாத்து கொள்ளலாம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர். எம்.தௌ பீக் தெரிவித்தார். (ஐ)

# 'ஜனவரி தமிழ்' பாரம்பரிய மாதம்! லண்டன் அசெம்பிளியில் தீர்மானம்

**தேசம் ஜெயபாலன்**

டிசெம்பர் 02இல் லண்டன் அசம்பிளியில் நிக்களஸ் ரோஜர் என்ற உறுப்பினர் கொண்டுவந்த 'ஜனவரி தமிழ் பாரம்பரிய மாதம்' என்ற தீர்மானத்தை அனைத்துக் கட்சி லண்டன் அசம்பிளி உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இத்தீர்மானம் லண்டனில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் பெரும் மாற்றத்தையோ தாக்கத்தையோ ஏற்படுத்தாத போதும், கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழர்கள் லண்டனின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வழங்குகின்ற பங்களிப்பை அங்கீகரிக்கின்ற, அதனை கௌரவிக்கின்ற ஒரு தீர்மானமாக இதனைக் கொள்ளலாம்.

லண்டன் ஒரு பல்லினச் சமூகம் வாழுகின்ற, பலவர்ணம் கொண்ட, ஒரு போதும் உறங்காத ஒரு நகர். உதாரணத்திற்கு லண்டனில் உள்ள ஒரு பாடசாலையில் மட்டும் 56 மொழி பேசுகின்ற மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்றால் இந்த நகரின் பன்மைத்துவத்தை கற்பனை செய்து பாருங்கள்.

பிரித்தானியாவில் குறிப்பாக லண்டனில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை ஏனைய சமூகங்களோடு (இந்தியர்கள்: குஜராத்திகள், சீக்கியர்கள், பாகிஸ்தானியர்கள், பங்களாதேஷிகள், சீனர்கள்) ஒப்பிடுகையில மிக மிகக் குறைவு. லண்டனின் மொத்த சனத்தொகை அண்ணளவாக 90 இலட்சம், கிட்டத்தட்ட இலங்கையின் மொத்த சனத்தொகையின் 50 வீதத்திற்கு சற்றுக் குறைவு. இதில் மொத்த தமிழர்களின் எண்ணிக்கை அண்ணளவாக இரு நூறாயிரம் மட்டுமே. ஆகக்கூடியது 2% வீதமானவர்கள் மட்டுமே. இந்த இரண்டு வீதத்திற்குள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், ரீயூனியன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர்கள் வாழ்கின்றனர்.

இவர்களில் இலங்கைத் தமிழர்களே லண்டனின் அரசியல், பொருளாதார விடயங்களோடு தங்களை கணிசமான அளவில் இணைத்துக்கொண்டு லண்டனை தங்கள் நகராக்கிக் கொண்டுள்ளனர். அதற்கு அவர்களுக்கு ஒரு தாயகப் பிரதேசம் இல்லாதது அடிப்படைக் காரணமாக உள்ளது. இந்திய, மலேசியத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் லண்டனை ஓர் இடைத்தங்கல் நிலையமாக காண்கின்றனர்.

லண்டன் ஈஸ்ற்ஹாம் என்பது ஒரு குட்டி யாழ்ப்பாணம் என்றால் அதில் மிகையல்ல. அங்கு கவுன்சிலராக பல ஆண்டுகள் வெற்றிபெற்று தைப் பொங்கலை ஈஸ்ற்ஹாம் வீதியில் கடந்த 20 ஆண்டுகளாகக் கோலாகலமாகக் கொண்டாடி வருபவர் முன்னாள் கவுன்சிலர் போல் சத்தியநேசன். தமிழ் சமூகம் பல்வேறு கூறுகளாக முரண்பட்டு இருந்தாலும் அவர்களை இணைத்து தமிழர்களுக்கு என்று ஒரு வரலாற்றை லண்டனில் உருவாக்க வேண்டும் என்பதற்கு வித்திட்டவர்களில் போல் சத்தியநேசன் குறிப்பிடத்தக்கவர். அவருக்கும் பல நெருக்கடிகள் வந்த போதிலும் அவற்றைக் கடந்து சில பல விடயங்களை அவர் சாதித்தும் உள்ளார். லண்டன் அசம்பிளியில் டிசம்பர் 2இல் கொண்டுவரப்பட்ட 'ஜனவரி தமிழர் பாரம்பரிய மாதம்' என்ற தீர்மானத்திற்கு இரு தசாப்தங்களுக்கு முன்னரேயே அவர் வித்திட்டு இருந்தார்.

தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் கல்வி, பொருளாதார தேடல் காரணமாக அவர்கள் லண்டனின் கல்வி, மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தி உள்ளனர். கல்வியைப் பொறுத்தவரை தமிழர்களுடைய சனத்தொகை விகிதாசாரத்துக்கு அதிகமாகவே தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர். பெரும்பாலும் இங்கிலாந்தில் உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களில் 'தமிழ் சொசைற்றி' ஒன்றை வைத்திருப்பார்கள். கல்வி மீதான பாரம்பரிய நம்பிக்கை இன்னமும் கணிசமான அளவில் காணப்படுகின்றது. இது ஆசியர்களுடைய குணாம்சங்களில் ஒன்றாக வும் உள்ளது.

லண்டனில் மட்டும் 40 வரையான தமிழ் கோயில்கள் உள்ளன. லண்டனில் தமிழர்கள் கணிசமாக வாழும் ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரிவிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழ் பள்ளிகள், மற்றும் தமிழ் அமைப்புகள் உள்ளன.

லண்டனில் மட்டுமல்ல இங்கிலாந்தில் ரிரெயில் செக்ரறில் தமிழர்களின் சிறு வியாபார நிறுவனங்கள் இல்லாத இடமே இல்லையென்று சொல்லலாம். இங்கிலாந்தில் உள்ள பெரும்பாலான பெற்றோல் நிலையங்கள் தமிழர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. தமிழர் பாரம்பரிய உணவு வகைகளையும் பல்வேறு சமூகத்தினரும் கொள்வனவு செய்கின்றனர். சட்டத்துறையிலும் தமிழர்களுக்கு குறைவில்லை. பிரித்தானியாவின் சுகாதார சேவைகளில் குறிப்பாக மருத்துவர்களில் கணிசமான பங்கினர் தமிழர்களாக உள்ளனர். தமிழ் மருத்துவர் இல்லாத ஒரு மருத்துவமனை இங்கிலாந்தில் இருக்குமா என்பது தெரியவில்லை. வங்கிகள், ஆசிரியத்துறை, ஊடகத்துறை என தமிழர்கள் பல்வேறு முனைகளிலும் தங்கள் சேவையை வழங்கி வருகின்றனர். தமிழர்களுடைய சனத்தொகைக்கு இத்துறைகளில் கணிசமான பங்கினர் ஈடுபட்டுள்ளனர். அதனால் தமிழர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறுபிரிவினராக இருந்தாலும் அவர்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம் கனதியானதாக உள்ளது. அதனால் அவர்கள் தவிர்க்கப்பட முடியாத ஒரு சிறுபான்மையாக உள்ளனர்.

இதுபோன்ற காரணங்களால் தமிழ் சமூகம் சிறுபான்மையாக இருந்தாலும் லண்டனில் ஒரு பார்வைக்குத் தெரியக்கூடிய ஒரு சமூகமாக எப்போதும் இருந்து வருகின்றது. அதனால் லண்டன் அரசியல் தளத்திலும் தமிழ் சமூகம் எப்போதும் ஒரு அதிர்வை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். இந்தப் பின்னணியிலேயே 'ஜனவரி - தமிழர் பாரம்பரிய மாதம்' என்ற தீர்மானத்தை லண்டன் அசெம்பிளி எடுத்திருந்தது.

டிசம்பர் 02இல் கொன்சவேடிவ் கட்சியின் உறுப்பினர் நிக்கலஸ் ரொஜர் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தார். அவர் லண்டனின் உருவாக்கத்தில் தமிழர்களின் பங்கை மொசாக் படத்தின் ஓர் கூறாக ஒப்பிட்டுக் குறிப்பிட்டார். சில சமயங்களில் அந்த ஒவ்வொரு கூறையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்றும் அந்த வகையில் லண்டன் தமிழ் சமூகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றும் குறிப்பிட்டார். இந்தப் பங்களிப்பு இலங்கையில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தப்பித்து வந்த பின்னரலித்த பங்களிப்பு என்றும் குறிப்பிட்டார். அந்த வகையில் 'தமிழ் மொழியையும் அதன் வளம்மிக்க கலாச்சாரத்தையும் இந்த மாதத்தில் பதிவு செய்வது பொருத்தமானது. ஜனவரி தமிழர்களுடைய பாரம்பரிய மாதம். அறுவடை நாளான ஜனவரி 14கை நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும். இதனை 2016இல் கனடிய அரசு அங்கிகரித்து இருந்தது. அதே போல் லண்டன் மேயரும் லண்டன் உள்ளூராட்சி மன்றங்களும் ஜனவரியை தமிழருடைய பாரம்பரிய மாதமாக அங்கீகரித்து அதனை அரத்தமுள்ள தாக்கி கொண்டாட வேண்டும்' என்று நிக்களஸ் ரொஜர் விவாதத்தை தொடக்கி வைத்தார்.



இங்கிலாந்தில் உள்ள பெரும்பாலான பெற்றோல் நிலையங்கள் தமிழர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. தமிழர் பாரம்பரிய உணவு வகைகளையும் பல்வேறு சமூகத்தினரும் கொள்வனவு செய்கின்றனர். சட்டத்துறையிலும் தமிழர்களுக்கு குறைவில்லை. பிரித்தானிய சுகாதார சேவைகளில் குறிப்பாக மருத்துவர்களில் கணிசமான பங்கினர் தமிழர்களாக உள்ளனர். தமிழ் மருத்துவர் இல்லாத ஒரு மருத்துவமனை இங்கிலாந்தில் இருக்குமா என்பது தெரியவில்லை. வங்கிகள், ஆசிரியத்துறை, ஊடகத்துறை என தமிழர்கள் பல்வேறு முனைகளிலும் தங்கள் சேவையை வழங்கி வருகின்றனர்.



கொன்சவேடிவ் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரும் கறுப்பினத்தவரான சோன் பெய்லி தமிழர்களுடைய பங்களிப்பை விதந்துரைத்ததுடன் (ஒக்ரோபர் மாதம்) கறுப்பின வரலாற்று மாதம் எவ்வாறு கறுப்பின மக்களுக்கு பயனைக் கொடுத்ததோ அதுபோல் தமிழர்களுடைய பாரம்பரியம் ஜனவரியில் மேற்கொள்ளப்படுவது அவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றார். கறுப்பின வரலாற்று மாதம் பாடசாலைகளிலும் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அடிமைத் தனத்தில் இருந்து கறுப்பின மக்கள் போராடி விடுதலை பெற்று பல்வேறு சாதனைகளைப் படைத்ததை நினைவு கூருவதனூடாக கறுப்பின இளம் தலைமுறையினருக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் கறுப்பின மக்களின் பங்களிப்புப் பற்றி இம்மாதத்தில் பேசப்படும்.

லண்டன் அசெம்பிளியின் துணைத் தலைவரான கெய்த் பிரின்ஸ் கொன்சவேடிவ் கட்சியைச் சேர்ந்தவர் குறிப்பிடுகையில் ஜனவரி மாதம் அறுவடை நாள், தமிழர்களுடைய தைப்பொங்கல் தினம் என்றும் அவர்களுடைய பங்களிப்பை இம்மாதத்தில் கௌரவிப்பது பொருத்தமானது என்றும் தெரிவித்தார்.

தொழில்கட்சியின் அசெம்பிளி உறுப்பினர் குருபேஸ் ஹிரானி, தமிழர்களுடைய பங்களிப்பை விதந்துரைத்து தீர்மானத்தை வரவேற்பதில் தான் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

தொழில்கட்சியின் மற்றுமோர் உறுப்பினரான ஒன்ஹார் ஸோஹோற்றா பேசுகையில் தமிழர்கள் பல்வேறு முனைகளிலும் தங்கள் பங்களிப்பை வழங்கி உள்ளனர் எனக்குறிப்பிட்டு தமிழர்கள் முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளனர் என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஜனவரி 14 தைப்பொங்கலை தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதாகவும் குறிப்பிட்டார். தொழில் கட்சியின் மற்றுமொரு உறுப்பினராக உன்மேஸ் தேசாய் குறிப்பிடுகையில் 1984 இல் முதல் தொகுதி தமிழர்கள் குண்டுவெடிப்புகளில் இருந்து தப்பி குறிப்பாக யாழ்ப்பாண நகரில் இருந்து வந்ததாகக் குறிப்பிட்ட அவர் அவர்கள் தன்னுடைய பகுதியான ஈஸ்ற்ஹாமிலேயே குடியேறியதாகவும் ஈஸ்ற்ஹாம் ரெட்பிரிஜ் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு தமிழ் வீடுகளிலும் உள்ளவர்களின் அவர்களின் ஊரில் உள்ள வீடுகளில் ஒரு வரையாவது இந்த மோசமான யுத்தத்தில் இழந்துள்ளனர். உடல் ஊனமுற்றுள்ளனர் என்றார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

> சீனாவின் பட்டுப்பாதை தந்திரம் ஆபிரிக்கா, ஆசியா, இந்தோ- பசிபிக், ஐரோப்பிய ஒன்றியம் வரை பரவிவிட்டது. சீனாவின் காஸ்கோ நிறுவனம், மிகப்பெரிய கிரேக்க கன்டெயினர் துறைமுகமான பிராஸின் (Piraeus) மூன்றில் இரு பங்கை தன் வசம் வைத்துள்ளது.



# சீனப் பட்டுப்பாதை திட்டத்துக்கு மாற்றாக ஐரோப்பிய ஒன்றியம் வகுக்கும் வியூகம் வெற்றிபெறுமா?

**ஜெஸிகா பார்க்கர்**

சீனா முன்னெடுத்து வரும் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு கச்சிதமான மாற்றாக, 300 பில்லியன் யூரோ மதிப்பிலான உலகலாவிய முதலீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம். அத்திட்டத்துக்கு 'குளோபல் கேட்வே' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

குளோபல் கேட்வே திட்டம் நம்பகமான திட்டமாக உருவெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வோன் டெர் லெயன் தெரிவித்துள்ளார். பல்வேறு ரயில், சாலை, துறைமுகத் திட்டங்களுக்கு சீனா நிதியுதவி வழங்கியது. அது அவர்களை கடனில் மூழ்கடிக்கச் செய்யும் திட்டமென குறை கூறப்பட்டு வருகிறது.

நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக் கூடிய திட்டங்களை வடிவமைக்க உலக நாடுகளுக்கு நம்பகமான கூட்டாளிகள் தேவை என உர்சுலா வோன் டெர் லெயன் தெரிவித்தார்.

உறுப்பு நாடுகள், நிதி நிறுவனங்கள், தனியார் துறையினரிடமிருந்து திரட்டும் நிதியை எப்படி எங்கு பயன்படுத்துவது என ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருகிறது. இத்தொகையில் பெரும்பகுதி மானியங்களாக வழங்கப்படுவதற்கு பதிலாக, உத்தரவாதங்களாகவோ கடன்களாகவோ வழங்கப்பட உள்ளது.

மாறுபட்ட, ஜனநாயக ரீதியிலான அணுகுமுறை வளரும் நாடுகளின் காலநிலை மாற்றம், உலகப் பொதுசுகாதார பாதுகாப்பு, நீடித்த நிலைத்தன்மை கொண்ட மேம்பாட்டு இலக்கை அடைய உதவும் என்பதை நிரூபித்துக் காட்ட விரும்புகிறது என உர்சுலா வோன் டெர் லெயன் கூறினார்.

நல்ல உயர்தரமான திட்டங்கள், அதிக வெளிப்படைத்தன்மையோடும், நல்ல நிர்வாகத்தோடும், திட்டத்தில் பங்கெடுக்கும் நாடுகளுக்கு நல்ல முன்னேற்றத்தைக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும் என்று விளக்கினார். இத்திட்டத்தில் ஆபிரிக்க நாடுகள் குவிமையமாக இருக்கும் என ஓர் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

சீனாவின் பட்டுப்பாதை தந்திரம் ஆப்பிரிக்கா, ஆசியா, இந்தோ - பசுபிக், ஐரோப்பிய ஒன்றியம் வரை பரவிவிட்டது. சீனாவின் காஸ்கோ நிறுவனம், மிகப்பெரிய கிரேக்க கன்டெயினர் துறைமுகமான பிராஸின் (Piraeus) மூன்றில் இரு பங்கை தன் வசம் வைத்துள்ளது. அதே போல க்ரோஷியா நாட்டில் சீனா "ரோட் அண்ட் பிரிட்ஜ் கோர்ப்பரேஷன்" ஒரு முக்கிய பாலத்தைக் கட்டியுள்ளது.

நிதி சார் பிரச்னைகளை எதிர்கொள்ள ஐரோப்பிய ஒன்றிய தரப்பிலிருந்து முன்னெடுக்கப்பட்டிருக்கும் முதல் தீவிர நடவடிக்கையைக் குறிக்கிறது இது, எனவே சீனாவிடமிருந்து கடன் வாங்கும் நாடுகளுக்கு வேறொரு வாய்ப்பும் உள்ளது என ஜெர்மன் மார்ஷல் ஃபண்டில் சீனியர் டிரான்ஸ் அத்திலாந்திக் ஃபெல்லோவாக இருக்கும் ஆண்ட்ரூவ் ஸ்மால் பிபிசியிடம் தெரிவித்தார்.

வளரும் நாடுகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்றால் குளோபல் கேட்வே திட்டத்தை சீனா வரவேற்கிறது என ஐரோப்பிய ஒன்றியத்துக்கான சீன தூதர் ஷாங் மிங் கடந்த மாதம் ஒரு சந்திப்பில் கூறியது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் உட்கட்டமைப்புத் திட்டங்களை பூகோள அரசியல் பிரச்னைகளாக மாற்றினால், அது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை தோல்வியடையச் செய்வதாக இருக்கும் மற்றும் தங்கள் சொந்த நலனையே பாதிப்பதாக இருக்கும் என கூறியதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

சீனாவில் வெளியுறவுக் கொள்கையில் பெல்ட் அண்ட் ரோட் திட்டம் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகிறது.

புதிய சாலைகள், துறைமுகங்கள், ரயில் தடங்கள், பாலங்களில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம், சீனா பல்வேறு வர்த்தக தொடர்புகளை மேம்படுத்திக் கொண்டது. மேலும் தன் கடன்கள் மூலம் நாடுகளை வளைத்துப் போடுவதாகவும் விமர்சிக்கப்பட்டது.

சீனாவின் இந்த கடன் கொடுக்கும் திட்டம் மிகவும் சிக்கலானது என்று வாதிடுபவர்களும் உள்ளனர். இத்தனை பெரிய தொகையை கடனாகப் பெறுவது என்பது கிட்டத்தட்ட எந்தவித ஆபத்தும் இல்லாதது என்கிறார்கள் அவர்கள்.

எப்படிப் பார்த்தாலும் சீனா பொருளாதார மற்றும் பூகோள அரசியல் மூலம் கால்தடம் பதித்து வளர்வது, மேற்குலகில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இப்போது நம் முன்னிருக்கும் கேள்வி என்னவெனில், ஐரோப்பிய ஒன்றியத்தால் பூகோள அரசியல் தளத்தில் செயல்பட முடியுமா என்பது தான் என்கிறார் ஆண்ட்ரூவ் ஸ்மால்.

அல்லது வளைந்து கொடுக்கும் தன்மையற்று, தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்ளுமா? ஒரு வேளை இதில் அவர்கள் தோற்றால், அது மிகப்பெரிய வாய்ப்பை தவறவிட்டதாகப் பொருள்" என்கிறார் ஸ்மால்.

"ஐரோப்பா இந்த தளத்தில் தங்கள் ஆதிக்கத்தை உறுதி செய்வது ஒரு நல்ல சமிக்ஞை" என ஓர் இராஜீக ரீதியிலான பணியில் உள்ள அதிகாரி என்னிடம் தெரிவித்தார்.

"அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் உள்ள டிரான்ஸ் அட்லான்டிக் நண்பர்களோடு நாங்கள் பகிர்ந்து கொள்ளும் பொதுவான விஷயம் இது" என்றார் அவர்.

பொதுவான விஷயங்கள் நாடுகளுக்கு மத்தியில் பெரும் போட்டியை உருவாக்கலாம் என்கிறார் சென்டர் ஃபார் குளோபல் டெவலெப்மென்ட்டில் மூத்த உறுப்பினராக இருக்கும் ஸ்காட் மோரிஸ்.

இதெல்லாம் போக கடந்த ஜூன் மாதம் ஜி7 மாநாட்டில், அமெரிக்கா "பில்ட் பேக் பெட்டர் வேர்ல்ட்" என்கிற திட்டத்தைத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. "இந்த விஷயத்தில் ஏகப்பட்ட திட்டங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்றன" என்கிறார் மோரிஸ்.

இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் குளோபல் கேட்வே திட்டம் வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவிக்கிறார் மோரிஸ். இத்திட்டம் சீனாவின் முன்னெடுப்புகளுக்கு எதிராக ஒரு போட்டியாக இருப்பதை விட, வளரும் நாடுகளில் சில நல்ல விஷயங்களைச் செய்யத் தேவையான பணத்தைக ஐரோப்பிய ஒன்றியம் கொடுத்து உதவியதாக இருக்கும்.

மதிப்பு அடிப்படையிலான மற்றும் வெளிப்படைத்தன்மை மிகுந்த திட்டங்கள் மற்றும் அணுகுமுறையை வலியுறுத்துவதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம், சார்பு நிலையின்றி, தொடர்புகளை மேம்படுத்த விரும்புவதை வலியுறுத்தியுள்ளது.

இருப்பினும் இதுவும் ஒரு விதமான ஆதிக்கம் தான். பூகோள அரசியல் விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தன் ஆதிக்கத்தைச் செலுத்தவே முயல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

**01) பின்வரும் பந்தியை வாசித்து 01 தொடக்கம் 06 வரையான வினாக்களிற்கு விடை எழுதுக.**

கடம் கர்நாடக இசையுடன் தொடர்புடைய தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். அது மிக எளிமையான ஓர் இசைக்கருவியாகும். இது ஒரு பெரிய மண்பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவியாகும். கட இசைக்கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயைத் தன் வயிற்றோடு ஒட்ட வைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பர்.

1) 'சிறிய' என்ற சொல்லின் எதிர்ச்சொல் யாது?

............................................................

2) மிக எளிமையான இசைக்கருவி எது?

............................................................

3) பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்றினை எழுதுக?

............................................................

4) 'கருவியில்' என்பதன் பன்மை வடிவம் யாது?

............................................................

5) உயர்திணை எதிர்கால வினைச் சொல்லை எழுதுக?

............................................................

6) 'சத்தம்' என்ற சொல்லின் ஒத்த சொல் யாது?

............................................................

**02) பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

1) தாலாட்டுப்பாடல்கள் இனிமையானது. ( )
2) எனது வீட்டில் அழகான மரங்கள் உள்ளது. ( )
3) அகரன் தமிழும் கணிதமும் படித்தான். ( )

**03) பின்வரும் மரபுத் தொடர்களுக்கான கருத்தை எழுதுக.**

1) நட்டாற்றில் விடுதல் ............................................................................

2) ஆறப்போடுதல் ............................................................................

**04) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்து எழுதுக.**

1) உயர்வு - ................................ 2) அருமை - ................................

**05) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) வீதியில் சென்ற அனைவரும் குடைபிடித்துச் .......................... (சென்றனர், சென்றான்).
2) சேவல்களும் காகங்களும் கதிரவனை........................ (வரவேற்கிறது, வரவேற்கின்றன).
3) ஓர் அடர்ந்த காட்டில் ............................................ ஆந்தை (ஒரு, ஓர்) இருந்தது.

**06) பின்வரும் பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1) பண்டம் / உப்பில்லாப் / குப்பையிலே

............................................................................................

2) கைப்பழக்கம் / செந்தமிழும் / நாப்பழக்கம் / சித்திரமும்

............................................................................................

**07) மிகச்சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) வர்ணனை / வர்னனை 2) மகிழ்சி / மகிழ்ச்சி

**08) பின்வரும் தொடர்மொழிக்கான ஒரு மொழியை எழுதுக.**

1) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - ................................
2) தெருக்கள் கூடுமிடம் - ................................

**09) பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**(பந்துகள், பிள்ளைகள், அலுமாரி)**

1) உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் - ................................
2) அஃறிணை ஒருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல் - ................................

## வினாத்தாள் - 02

01) 1) பெரிய 2) கடம்
3) வாய் / வயிறு / கை 4) கருவிகளில் 5) வாசிப்பர்
6) ஒலி

02) 1) பிழை 2) பிழை 3) சரி

03) 1) ஆபத்து வேளையில் கைவிடல்.
2) பிற்போடுதல் / காலந்தாழ்த்துதல்.

04) 1) தாழ்வு 2) பெருமை

05) 1) சென்றனர் 2) வரவேற்கின்றன 3) ஓர்

06) 1) உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
2) சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

07) 1) வர்ணனை 2) மகிழ்ச்சி

08) 1) வேட்பாளர் 2) சந்தி / சதுக்கம்

09) 1) பிள்ளைகள் 2) அலுமாரி

# மனுஷ நாணயக்கார எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## வலியுறுத்தி 38 எம்.பிக்கள் சபாநாயகருக்குக் கடிதம்

**கொழும்பு, டிச. 06**

**பாராளுமன்றத்தில் சபாநாயகரை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் அங்கம் வகிக்கும் 38 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"2021 டிசெம்பர் 03 ஆம் திகதி மாலை இடம்பெற்ற பாராளுமன்ற குழு நிலை விவாதத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சபாநாயகருக்கு அச்சுறுத்தல் விடுத்த விடயம் தொடர்பில் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டே வருகின்றோம்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தின் இறுதித் தருணத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார எம்.பிக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்போது அவருக்கு உரையாற்றுவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்த நிலையிலும்கூட தொடர்ந்து அவர் உரையாற்றிக் கொண்டிருந்ததால், உரையை முடிவுக்குக் கொண்டு வருவமாறு சபநாயகரால் அறிவுறுத்தப்பட்டது.

எனினும், அவர் தொடர்ந்து உரையாற்றியதால் அவரது ஒலிவாங்கி அணைத்துவிடப்பட்டது.

இதையடுத்து அவர் சபாநாயகரின் அரியாசனத்துக்கு அருகில் வந்து சபாநாயகரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார்.

இதன்போது நீங்கள் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் தாக்கப்படலாம் என்பதே எமக்குப் புலப்பட்டது.

இதன்போது ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அவ்விடத்துக்கு வந்ததால், மனுஷ நாணயக்கார எம்.பி. பின்வாங்கிச் சென்றார்.



பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சம்பிரதாய முறைமையை மீறும் வகையிலும் நாட்டின் சட்டதிட்டங்களை மீறும் வகையிலுமே மனுஷ நாணயக்கார எம்.பி. செயல்பட்டுள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து இவ்வாறான ஒரு நிலைமை பாராளுமன்றத்தில் மீண்டும் ஏற்படாத வகையில் மனுஷ நாணயக்கார எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்" - என்றுள்ளது. (இ)



## குடும்பஸ்தர் படுகொலை: இரு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிச. 06

கொழும்பு, பேலியகொடை மீன் சந்தைக்கு அருகில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 42, 45 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்தில், பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

இது தொடர்பில் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ஜனவரி தமிழ் பாரம்பரிய...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

தமிழர்கள் இல்லாமல் ஈஸ்ற்ஹாம் ஹைஸரீற் இல்லையென்றும் யுத்த வடுக்களோடு வந்து லண்டன் நகரோடு இரண்டறக் கலப்பதற்கு தமிழர்கள் ஒரு முன்னுதாரணம் என்றும் கூறி தீர்மானத்தை வரவேற்றார்.

'வணக்கம்' என்று சொல்லி தான் பேச்சை ஆரம்பிக்க விரும்புவதாகக் கூறி ஆரம்பித்த லிபிரல் டெமொகிரட் கட்சியைச் சேர்ந்த ஹினா புஹாரி மற்றையவர்களைப் போல் தாங்களும் இத்தீர்மானத்தை மிகவும் வரவேற்பதாகவும் தமிழர்களுடன் தங்கள் கட்சி நெருக்கமாகச் செயற்படுவதைச் சுட்டிக்காட்டியதுடன் தமிழ் சமூகத்திற்கு 'நன்றி' என்று சொல்லி தன் பேச்சை முடித்தார்.

கொன்சவேடிவ் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரான ரொனி டெவினிஸ் சுருக்கமாக குறிப்பிடுகையில் நிக்களஸ் ரொஜர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் தான் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டார். பசுமைக் கட்சியைச் (கிறீன் பார்ட்டி) சேர்ந்த ஸாக் பொலாஸ்கி தமிழர்களுடைய பங்களிப்பையும் தீர்மானத்தையும் வரவேற்றுக் குறிப்பிட்டார்.

இறுதியாக நிக்கலஸ் ரொஜர், தீர்மானத்துக்கு ஆதரவளித்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

லண்டனில் தமிழர்களுடைய அரசியல் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் அது அதன் முழுவீச்சில் இன்னும் இல்லை. இதுவரை தமிழர் யாரும் பாராளுமன்ற உறுப்பினராக வரவில்லை. அதற்கான வாய்ப்புகளும் அண்மைய எதிர்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் தமிழர்களுடைய சனத்தொகை கணிப்பின்படி ஒவ்வொரு தொகுதி தமிழர்களும் ஒரே மாதிரி வாக்களித்ததால் 50 உள்ளூராட்சி உறுப்பினர்கள் வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் உள்ளூராட்சி உறுப்பினர்கள் பத்து முதல் பதினைந்து பேர் வரையே உள்ளனர். தமிழர்களுடைய அரசியல் செல்வாக்கு என்பது இன்னமும் தமிழ் தேசிய அரசியலை ஒட்டியதாகவே இன்னமும் உள்ளது. இங்குள்ள அரசியல் வாதிகளை வைத்து இலங்கை அரசுக்கு எதிராக எதையாவது சாதித்திட வேண்டும் என்ற முனையிலேயே லண்டன் தமிழ் அரசியல் இன்னமும் உள்ளது.

இவ்வாறு எல்லாவற்றையும் முன்னுதாரணமாகக் காட்டுவதால் லண்டன் தமிழ் சமூகத்திற்குள் பிரச்சினையே இல்லையென்ற தவறான முடிவுக்கு யாரும் வந்துவிடக் கூடாது. இளைஞர் குழக்களின் வன்முறை தேசிய அளவில் பேசப்படும் அளவுக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. கடந்த இரு தசாப்தங்களில் லண்டனை உலுக்கிய சில கொலைகள் உட்பட 30 வரையான தமிழ் படுகொலைகள் தமிழர்களால் நடந்துள்ளன. ரெயிலில் குதித்து தற்கொலை செய்ததாக செய்தி வந்தால் அது தமிழராக இருப்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். கடந்த பத்து ஆண்டுகளில் ஐந்து தாய்மார் பிள்ளைகளைக் கொலை செய்து தற்கொலைக்கு முயற்சித்தனர். அவ்வளவுக்கு தமிழ் சமூகத்தில் மனநிலை பாதிப்புகள் கண்டுகொள்ளப்படாமல் உள்ளது. குடும்ப வன்முறைகள் அதனால் பிள்ளைகள் அரச சமூகப் பிரிவின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படும் நிலைகளும் இங்குள்ளது.

ஆகவே ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் உள்ள சிக்கல்களும் கஸ்டங்களும் தமிழ் சமூகத்திற்குள்ளும் உள்ளது. அவற்றை ஆராய்ந்து பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு அடுத்த கட்டம் நோக்கி தமிழர்கள் நகரவேண்டும். யாழ்ப்பாணத்தில் மழை பெய்தால் ஈஸ்ற்ஹாமிலும் ஹரோவிலும் குடை பிடிக்கும் அரசியல் இன்னும் எத்தினை நாளைக்கு.

லண்டனில் பலநூற்றுக்கணக்கான தமிழ் குடும்பங்களில் குடும்ப வன்முறை பெரும் பிரச்னையாக உள்ளது. அதற்கு அதீத மதுப்பழக்கம் முக்கிய காரணமாக உள்ளது. மனவழுத்தம் பற்றிய விழிப்புணர்வு இன்னமும் சரியான வகையில் கையாளப்படவில்லை. இவை ஓரளவு வெளித்தளத்தில் தெரிகின்ற பிரச்சினைகள் இதைவிடவும் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் பலவும் உள்ளது.

இங்குள்ள தமிழர்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் அவசியமாகின்றது. லண்டன் அசம்பிளி "ஜனவரி தமிழர் பாரம்பரிய மாதம்" என்று அறிவித்தது போல் லண்டன் தமிழர்கள் ஜனவரியை மதுவிலக்கு மாதமாக அறிவிக்க வேண்டும். கடைப்பிடிக்க வேண்டும். திருமணம் மற்றும் விழாக்களில் மதுவை முற்றாகத் தடை செய்ய வேண்டும். பொது நிகழ்வுகளிலும் சமூக வலைத்தளங்களிலும் மதுப் பாவனையையும் அதன் படங்களைப் போட்டு கொண்டாடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும். ■

## கிண்ணியா படகு விபத்து: உயிரிழப்பு எட்டாக உயர்வு

திருகோணமலை, டிச. 06

திருகோணமலை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்வடைந்துள்ளது.

குறித்த படகு விபத்தில் படுகாயமடைந்த மற்றுமொரு பெண், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சக்கரிய்யா காலிஸா (வயது 42) என்பவரே இவ்வாறு மரணமடைந்தார்.

கடந்த நவம்பர் 23ஆம் திகதி குறிஞ்சாக்கேணியில் இழுவைப் படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிய நிலையில் படுகாயமடைந்த குறித்த பெண் மேலதிக சிகிச்சைக்காகக் கிண்ணியாலிருந்து திருகோணமலை வைத்தியசாலைக்கும், அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில், அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதன்படி கிண்ணியா - குறிஞ்சாக்கேணி இழுவைப் படகு விபத்தில் இதுவரை 8 பேர் உயிரிழந்தனர். (இ)

## கொழும்பில் இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை!

கொழும்பு, டிச. 06

கொழும்பு, பழைய சோனகத் தெருவில் இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். "கெசல்வத்தை பவாஸ்" என்றழைக்கப்படும் இளைஞரே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழு, குறித்த இளைஞரை வாளால் வெட்டியும், கத்தியால் குத்தியும் கொலைசெய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் ஆரம்பகட்ட தகவல்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



## குழந்தை பெற்றெடுக்கவல்ல உயிரி ரோபோ கண்டுபிடிப்பு

### அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவிப்பு

நியூயோர்க், டிசெ. 06

உலகின் முதல் உயிருள்ள ரோபோவை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த ரோபோக்கள் தங்களை போன்றே குழந்தைகளை பெற்று எடுக்கின்றன.

அமெரிக்காவின் வெர்மாண்ட், டப்ட்ஸ், ஹவாரட் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக உயிரி ரோபோ ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2020ஆம் ஆண்டில் உலகின் முதல் உயிருள்ள ரோபோவை இவர்கள் உருவாக்கினர்.

ஆபிரிக்காவைச் சேர்ந்த ஜீனோபஸ் லேவிஸ் என்ற தவளை இனத்தின் ஸ்ரெம் செல்களில் இருந்து உரு வாக்கியதால் இதற்கு “ஜீனோபாட்ஸ் 1.0” என்று பெயரிடப்பட்டது. இவை ஒரு மில்லி மீற்றருக்கும் குறைவான அகலம் கொண்டவை. இந்த ரோபோக் களால் நகர முடியும். நீந்த முடியும்.

தொடர் ஆராய்ச்சியின் பலனாக கடந்த மே மாதம் ஜீனோபாட்ஸ் 2.0 ரோபோ உருவாக்கப் பட்டது. சில நாட்களுக்கு முன்பு ஜீனோபாட்ஸ் 3.0 ரோபோ குறித்த ஆய்வறிக்கையை அமெரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டனர். அதில் கூறியி ருப்பதாவது:

உலகின் பல்வேறு நாடுகளில் இரும்பு, பிளாஸ்ரிக் கால் ரோபோக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் இருந்து வேறுபட்டு உயிரி ரோபோக்களை உருவாக் கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கி றோம். இப்போது ஜீனோ பாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கியுள்ளோம். இவற்றால் தங்களைப்போன்றே குழந்தைகளை பெற்றெடுக்க முடியும். இந்த ரோபோ ஆராய்ச்சியின் மூலம் விபத்தில் படுகாயமடைந்த மனிதர்களை குணப்படுத்த முடியும். பிறவி குறை பாடுகள், புற்றுநோயை குணப்படுத்த முடியும். முதுமை பிரச்னைக்கும் தீர்வுகாண முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜீனோபாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கிய விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றுள்ள டப்ட்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி பிளாகிஸ் தான் கூறும் போது, “ஆய்வகத்தில் ஒரு ஜீனோ பாட்ஸ் ரோபோ குழந்தையை பெற்றெடுக்க 5 நாட்கள் ஆகிறது. இதுவும் அச்சு, அசல் ஜீனோபாட்ஸ் ரோபோ போன்றே இருக்கிறது. எதிர்காலத்தில் அணுக் கழிவு, கடலில் சேகரமாகும் மைக்ரோபிளாஸ்ரிக் கழிவு பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஜீனோபாட்ஸ் ரோபோவை பயன்படுத்த முடியும்” என்றார்

ஆபத்தான ரோபோ?

அமெரிக்காவின் டூக் பல்கலைக்கழக பேராசிரியர் நிடா பாராஹனி கூறும்போது, “ஜீனோபாட்ஸ் ரோபோவால் தன்னைப் போன்றே குழந்தையை பெற்றெடுக்க முடியும் என்றால் அது ஆபத்தானது. இவை ஆய்வகத்தில் இருந்து தப்பி பூமியில் பல்கிப் பெருக வாய்ப் புள்ளது. எதிர்காலத்தில் இவற்றின் இனப்பெருக் கம், செயல்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்பதை கணிக்க முடியாது. செயற்கையாக உருவாக்கப் பட்ட உயிரி ரோபாவால் மனித குலத்துக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, ஆபத்தான ஆராய்ச்சியை நிறுத்த வேண்டும். மனித குலத்தின் நன்மைக்காக அனைத்து உயிரி ரோபோக்களை யும் அழித்துவிட வேண்டும்” என்றார். (ஐ)

## தென்கொரியாவில் கொரோனா தொற்றும் பலியெடுப்பும் உச்சம்!

சியோல், டிசெ. 06

தென் கொரியாவில் தினசரி கரோனா பாதிப்பு மற் றும் பலி எண்ணிக்கை புதிய உச்சங்களைத் தொட் டுள்ளது.

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மட் டும் அங்கு 5,352 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த நோய்க்கு 70 பேர் பலியாகினர். இந்த எண்ணிக்கைகள், இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கைகளாகும்.

தென்கொரியாவில் 5 பேருக்கு ஒமைக்ரான் வகை கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமையும் உறுதி செய் யப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய இராணுவத்தினர் சுட்டதில் 13 அப்பாவி பொதுமக்கள் மரணம்!

## நாகலாந்தில் பெரும் வன்முறை



புதுடில்லி, டிசெ. 06

இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் தீவிரவாதிகள் என்ற சந் தேகத்தில் இராணுவத்தினர் சுட்ட தில் 13 அப்பாவி தொழிலாளர்கள் உயிரிழந்தார். இதனால் ஆத்திரம டைந்த பொதுமக்கள் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். இதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், இராணுவத்தினருக்கு சொந்தமான வாகனங்களையும் தீக்கிரையாக்கினர்.

நேற்று அதிகாலை இந்தச் சம் பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நாகலாந்து மாநிலத்தின் மியான் மர் எல்லையருகே உள்ள மான் மாவட்டம் ஒட்டிங் கிராமத்தில் நக்சல்கள் நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலை அடுத்து பாதுகாப்பு படையினர் கடும் சோதனையில் மேற்கொண்டனர்.

அத்துடன், நக்சல்கள்மீது தாக்குதல் நடத்தவும் திட்டமிட் டிருந்தனர். அப்போது தீவிரவாதி கள் என நினைத்து படையினர் சுட்டதில் பொதுமக்கள் 13 பேர் பலியாகினர். இவர்கள் அனைவரும் 15 கி.மீ. தொலைவில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் பணிபுரிந்த கூலித் தொழிலாளர்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஊருக்கு வந்து விட்டு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தவர்கள். தங்களின் கிராமங்களுக்கு செல்ல காத்திருந்த போதுதான் இந்த படுகொலை சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதனால், ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். படையினரின் வாகனங்கள் தீக்கிரையாக்கப் பட்டன. இதையடுத்து, சம்பவ இடத்திற்கு கூடுதல் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் துரதிருஷ்ட வசமானது என்றும் இது குறித்து உயர் மட்ட விசாரணை நடத்தப் படும் , மக்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் மாநில முதல்வர் நெப்பியூ ரியோ கூறியுள்ளார். (ஐ)

## 38 நாடுகளுக்கு பரவியது ஓமைக்ரோன்! இதுவரை மரணம் எதுவும் நிகழவில்லை

### உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

ஜெனிவா, டிசெ. 06

தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸின் புதிய திரிபான ஒமைக்ரான் வைரஸ் 38 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்தத் தொற்றால் யாரும் உயிரிழக்கவில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.



ஒமைக்ரோன் திரிபு இதுவரை கண்டறியப் பட்ட வைரஸ்களில் மிக வும் வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாகவும், தடுப்பூசியை அதிகமாக எதிர்க்கும் தன்மை கொண் டதாகவும் அறிகுறிகளும் தீவரத்தன்மை கொண்ட தாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக் கிறார்கள்.

மரியா வான் கெர்கோவ் இந்த நிலையில் ஒமைக்ரான் வைரஸ் 38 நாடுகளில் இதுவரை பரவிவிட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொரோனா எதிர்ப்பு தொழில்நுட்ப பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் கூறுகையில் “ ஒமைக்ரான் வைரஸ் இதுவரை 38 நாடுகளுக்கும், 6 மண்டலங்களுக்கும் பரவிவிட்டது.

தென்னாபிரிக்காவில் இப்போதுதான் ஒமைக்ரான் வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. இனிவரும் காலங் களில் ஒமைக்ரான் பரவல் அதிகரிக்க வாய்ப்புள்ளது இருப்பினும் இன்னும் டெல்டா வகை வைரஸ்தான் வீரியம் மிகுந்ததாக இருக்கிறது. சார்ஸ்கோவிட்டை விட ஒமைக்ரான் வைரஸ் வித்தியாசமானது வேறுபட் டது என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

அடுத்த இரு வாரங்களில் ஒமைக்ரான் வைரஸ் உலக ளவில் பரவுவது அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஒமைக்ரான் பரவல், தீவிரத்தன்மை, நோய் எதிர்ப்புச் சக்தியிலிருந்து தப்பித்தல், தடுப்பு நடவடிக்கைகள், கிளினிக்கல் நடவடிக் கைகள் ஆகியவை குறித்த ஆய்வுகள் நடந்து வருகின்றன.

தொடக்க நிலை ஆய்வுகளின் முடிவுகளைப் பொறுத்தவரை ஒமைக்ரான் பரவல் வேகமாக இருக்கும், தடுப்பூசி மூலம் கிடைத்த நோய் எதிர்ப்புச் சக்தியி லிருந்து தப்பிக்கும் தன்மை கொண்டதால்தான் தொற்று அதிகரிக்கிறது” என்றார். (ஐ)



## இந்தோனேசியாவில் எரிமலை வெடித்ததில் 13 பேர் உயிரிழப்பு

ஜகார்த்தா, டிசெ. 06

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள செமேரு எரிமலை சனிக்கிழமையன்று வெடித்தது.

இதனால் அருகிலுள்ள நகரங்கள் மற்றும் கிராமங் களை சாம்பல் மற்றும் கரும் புகை சூழ்ந்தமையினால் குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே றினர்.

எரிமலை வெடிப்பின் விளைவாக குறைந்தது 13 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் வைத்தியசாலைகளில் சேர்க் கப்பட்டுள்ளனர் என்று இந்தோனேசியாவின் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவன தகவல்களை தெரிவித்தன.

எரிமலை வெடிப்பால் ஒரு பாலம் இடிந்து விழுந் ததாகவும், சம்பல் மற்றும் புகைகள் வானை எட்டியுள் ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூர் நேரப்படி சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணியளவில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டது. 3,676 மீற்றர் உயரம் (12,060 அடி உயரம்) கொண்ட செமேரு இந்தோனேசியாவில் அடிக்கடி குமுறும் எரிமலை யாகவும் ஜாவா தீவில் உள்ள மிக உயரமான மலையா கவும் உள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் இருந்து செமரு பலமுறை வெடித்துள்ளது, இதனால் நூற்றுக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியமையும் குறிப் பிடத்தக்கது. (ஐ)



## ஆஷஷ் டெஸ்டின் முதல் போட்டி; அணியை அறிவித்தார் கம்மின்ஸ்

*சிட்னி, டிசெ. 06*

*ஆஷஷ் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் வீரர்கள் பட்டியலை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் நேற்று அறிவித்தார்.*

*அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஷ் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நாளைமறுதினம் புதன்கிழமை தொடங்குகிறது. ரிம்பெயின் விலகியமையைத் தொடர்ந்து இந்தத் தொட ருக்கு பட் கம்மின்ஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், முதல் போட்டியில் விளையாட வுள்ள வீரர்களின் பட்டியல கம்மின்ஸ் நேற்று அறி வித்தார்.*

*இந்தப் போட்டியில் அனுபவ வீரரான உஸ்மான் கவாஜாவுக்கு அணியில் இடமில்லை. அவருக்குப் பதில் டிராவிஸ் ஹெட் சேர்க்கப்பட்டுள்ளார். அவர், 5ஆவது வரிசை துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவார் என்றும், மிற்செல் ஸ்டார்க்கும் களமிறங்கவார் எனவும் கம்மின்ஸ் அறிவித்திருக்கிறார்.*

*அணி விவரம்,*

*மார்கஸ் ஹரிஸ், டேவிட் வோர்ணர், மார்னஸ் லபுஷேன், ஸ்ரீவ் ஸ்மி, டிராவிஸ் ஹெட், கமரூன் கிறீன், அலெக்ஸ் ஹரி (விக்கெட் காப்பாளர்), பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), மிற்செல் ஸ்ரார்க், நதன் லியொன், ஜோஷ் ஹசில்வூட்.*

# நியூசிலாந்து அணி தடுமாற்றம் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு!

*மும்பை, டிசெ. 06*

*முதல் இனிங்ஸில் 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் 140 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது. 400 ஓட்டங்கள் முன்னிலையில் இருக்கும் இந்திய அணி வெற்றிக்கு அருகாமையிலுள்ளது.*

*இந்தியா - நியூசிலாந்து மும்பையில் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் இரண்டாவது இனிங்ஸில் ஆடிய இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.*

*மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி. 70 ஓவர்களுக்கு 7 விக்கெட்களை இழந்து 276 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை இடை நிறுத்தியது.*

*இதில், மயங்க் அகர்வால் 62, புஜாரா 47, ஷப்மன் கில் 47, விராட் கோலி 36, அக்சர் பட்டேல் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.*

*முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணிக்காக 10 விக்கெட்களையும் கைப்பற்றிய அஜாஸ் பட்டேல் 4 விக்கெட்களையும், ரவீந்திர 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.*



*540 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி நேற்று துடுப்பெடுத்தாடியது நியூசிலாந்து அணி. தொடக்கம் கொடுத்த வில்யங் 20 ஓட்டங்கள், அடுத்து வந்த ரெய்லர் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.*

*மற்றொரு தொடக்க வீரரான டரில் மிற்செல் 60 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் நியூசிலாந்து அணி 45 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.*

*ஹென்றி நிக்கோலஸ் 36 ஓட்டங்களுடனும், ரச்சின் ரவீந்திர 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.*

*இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும்.*

# அஜாஸ் பட்டேல் புதிய சாதனை!

*மும்பை, டிசெ. 06*

*டெஸ்ட் கிரிக்கெட்டில் நியூசிலாந்து அணியின் சுழல் பந்துவீச்சாளர் அஜாஸ் பட்டேல் இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 14 விக்கெட்களை வீழ்த்தி புதிய சாதனை படைத்துள்ளார்.*

*மும்பையில் இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நடந்து வருகிறது. இதில் நியூசிலாந்து அணியின் சுழல் பந்துவீச்சாளர் அஜாஸ் பட்டேல் முதல் இனிங்ஸில் 10 விக்கெட்களை வீழ்த்தி, சாதனையாளர்கள் பட்டியலில் கும்ப்ளே, ஜிம் லேக்கர் ஆகியோ ருடன் இணைந்தார். இந்நிலையில் ஒரு டெஸ்ட் போட்டியில் 14 விக்கெட்களை வீழ்த்தி மற்றொரு சாதனை யையும் நிகழ்த்தியுள்ளார்.*




*முதல் இனிங்ஸில் 10 விக்கெட்களை கைப்பற்றிய அஜாஸ், இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். அவர் 225 ஓட்டங்களை கொடுத்து இந்த சாதனையை படைத்தார். இதன்மூலம் இங்கிலாந்தின் சகலதுறை வீரர் இயன் பொதாமின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.*

*இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 1980ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர் இயன் பொதாம் 106 ஓட்டங்களை கொடுத்து 13 விக்கெட்களை கைப்பற்றியதே சாதனையாக இருந்தது. இப்போது அஜாஸ் அந்த சாதனையை முறியடித்துள்ளார்.*

*அதுமட்டுமல்லாமல் சுழல்பந்துவீச்சாளர் என்ற வகையில் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஓ கீபேயின் சாதனையான 70 ஓட்டங்களுக்கு 12 வகிகெட்கள் என்ற மைல்கல்லையும் அஜாஸ் பட்டேல் முறியடித்துள்ளார். (ஐ)*

# பாகிஸ்தான் - பங்களாதேஷ் டெஸ்ட் மழையால் பாதிப்பு!

*டாக்கா, டிசெ. 06*

*பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நாளில் அந்த அணி 5 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டுள்ளன.*

*பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி டாக்காவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.*

*இதன்படி, பாகிஸ்தானின் தொடக்க வீரர்களாக அபித் அலி, அப்துல்லா ஷபிக் களமிறங்கினர். அபித் அலி 39 ஓட்டங்களிலும், ஷபிக் 25 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.*

*அடுத்து இறங்கிய அசார் அலியுடன், அணித் தலைவர் பாபர் அசாம் ஜோடி சேர்ந்தார். இந்த இணை நிதானமாக விளையாடியது. பாபர் அசாம் பொறுப்புடன் அரைச்சதமடித்தார்.*

*இறுதியில், பாகிஸ்தான் அணி 57 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 161 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அசார் அலி 36 ஓட்டங்களுடனும், கேப்டன் பாபர் அசாம் 60 ஓட்டங்களுடனும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் மழையால் நிறைவுக்கு வந்தது.*

*நேற்றும் ஆட்டம் தொடங்க முன்பாக கடும் மழை பெய்தது. பிற்பகலின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது 5 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டது. மீண்டும் மழை குறுக்கிடவே இரண்டாம் நாள் ஆட்டமும் முடிவுக்கு வந்தது.*

*பாகிஸ்தான் அணி அப்போது 2 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அசார் அலி 52, பாபர் அசாம் 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.*

*இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)*



# போர்க்குற்றவாளிகளைப் பாதுகாத்தால் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது



## பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிச. 06

“இலங்கை ஒரு பல்தேசங்கள் கொண்ட நாடென்பதை ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் நீங்கள் எங்களை மட்டுமல்லாது உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகின்றீர்கள். நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்களத் தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல. இனப்படுகொலையைப் புரிந்தவர்களைப் பாதுகாத்துக்கொண்டு இருக்கும்வரையில் இனப்படுகொலை என்பது தப்பிக்கொள்ளக்கூடிய ஒரு குற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் உங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியாது; பாதுகாப்பாக உணரவும் முடியாது.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“ரோம் சாசனத்தின் 6ஆவது உறுப்புரையானது இனப்படுகொலைக் குற்றம் என்பதனை வரையறை செய்கின்றது. இந்த சர்வதேச சாசனத்தை இலங்கை அரசு தொடர்ந்து ஏற்க மறுத்து வருவதற்கான காரணம் இன்று வெளிப்படையாகின்றது. அன்று யுத்தம் அதன் உச்சக் கட்டத்தில் இருந்தபோது நடைபெற்ற சம்பங்களை கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தின்போது தெளிவாக வெளிப்படுத்தியிருந்தேன்.

அங்கு போர் வலயத்தினுள் சிக்கியிருந்த மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்ததை ஏற்றுக்கொள்வதெனும் முடிவுக்கு 2009 மே16 இரவு எட்டு மணியளவில் இலங்கை அரசு கொள்கையளவில் முன்வந்திருந்தது. ஆனால், அங்கு சிக்கியிருந்த ஏறத்தாழ ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்களைப் பாதுகாத்து அவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வரும் செயற்பாடு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜோர்டானில் நடைபெற்றுக்கொண்டிருந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இருந்து மே 17ஆம் திகதி திரும்பிவந்தவுடன் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்தச் செயற்பாடு நடைபெறவில்லை. 17ஆம் திகதி காலை போர் வலயத்தினுள் சிக்கியிருக்கும் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை நான் விடுதலைப்புலிகளுக்கு அறிவித்திருந்தேன்.

ஆனால், 16ஆம் திகதி இரவு 10 மணியளவில் மிகவும் பயங்கரமான செய்திகளைத் தாங்கிய பல தொலைபேசி அழைப்புகள் வன்னியிலிருந்து எனக்கு வந்தன. ஆயுதங்களை மௌனிப்பது எனும் புலிகளின் முடிவை அரசு ஏற்று மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைக்கு ஒத்துக்கொண்ட பின்னரும் கூட போர் வலயத்தை நோக்கி எழுந்தமானமாக கடும் உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆட்லெறித் தாக்குதல்கல் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக அங்கிருந்துவந்த தொலைபேசி அழைப்புகள் கூறின.

நான் உடனடியாகவே 16-05-2009 இரவு 10.30 மணியளவில் பசில் ராஜபக்சவுடன் தொடர்புகொண்டு “நீங்கள் மக்களின் பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவுமே அனைத்தையும் (இந்தப் போரை) செய்கின்றோம் எனக் கூறிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால், உங்கள் அரசு ஒத்துக்கொண்டால் அங்கிருக்கும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பாக நாளையே அழைத்துவரக்கூடிய கூடிய நிலைமை இருக்கும்போது ஏன் பொதுமக்கள்மீது இப்படியான கொடூரமான ஆட்லெறித் தாக்குதல்களைப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்கின்றது?” எனக் கேட்டிருந்தேன்.

அவர் தான் பாதுகாப்பு அமைச்சோடு பேசி ஒரு முடிவுக்கு வருவதாக என்னிடம் கூறினார். ஆனால், அவர் மீண்டும் என்னிடம் தொடர்பு கொண்டு அடுத்த பாதுகாப்பு பேரவையில் கூட்டம் 17ஆம் திகதி நடக்கும் வரை இந்தத் தாக்குதல் திட்டம் தொடரும் என பாதுகாப்பு அமைச்சு தனக்கு அறிவித்ததாக அவர் கூறினார். இந்தப் பயங்கரமான நிலைமையின் தாற்பரியத்தை நம்புவதற்கு நீங்கள் மறுக்கலாம் அப்படி நடந்தது என்பதை கூறக்கூட நீங்கள் மறுக்கலாம். ஆனால், அதற்கெல்லாம் நேரடி சாட்சியாக நான் இருக்கின்றேன்.

போர்வலயத்துள் சிக்கியுள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் தமதுஆயுதங்களை மௌனிக்கத் தயாராக இருப்பதாக 16 மே பிற்பகல் 4 மணியளவில் மிக தெளிவாக என்னூடாக அரசுக்கு அறிவித்திருந்தார்கள். ஆனால், பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களைப் பாதுகாக்கும் அந்த முயற்சியை ஏற்க அடியோடு மறுத்து விட்டது. மாறாக கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தினார்கள். அதற்கு நான் சாட்சி மேலும் கடந்த வருடம் இந்த அவையில் உரையாற்றிய சரத் பொன்சேகா, போரின் இறுதி நாள் வரை கடுமையான கனரக ஆயுத தாக்குதல்கள் தொடர்ந்து நட்டத்தப்பட்டதாக உரிமை கோரியிருந்தார்.

இப்படியாக போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்திருந்த நிலையில் நீங்கள் அதை ஏற்க மறுத்து தொடர்ந்தும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதென்பது மக்களின் உயிரிழப்பை முடிந்தளவு அதிகரித்து அந்த மக்களை முழுமையாகவோ ஆகக்குறைந்தது பகுதியாகவோ அழிப்பது என்னும் ஒரே நோக்கத்துக்காகவே என்பது தெளிவாகின்றது.

போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்த போதிலும் போர் வலயத்தில் மக்கள் சிக்குண்டிருப்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பிறகும் இப்படியாக அந்தப் பிரதேசம் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தியது இனப்படுகொலை என்பதில் சந்தேகமில்லை. இது ஒரு சாதாரணமான குற்றம் அல்ல. எவரும் எண்ணிப் பார்க்க முடியாத மிக பயங்கரமான குற்றம் இது.

பாதுகாப்பு அமைச்சு, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை அனைத்தும் இந்த இனப்படுகொலையின் குற்றவாளிகளே. அனைவரும் இலங்கையர்கள் எனச் சிந்திக்க வேண்டும் என நீங்கள் கூறிக்கொள்கின்ற இந்த சமயத்தில் இலங்கையில் இப்படியான ஒரு குற்றம் நடந்ததா? இல்லையா? என உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவாவது ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையை நடத்துவது உங்களது பொறுப்பில்லையா?

ஆனால், நாம் இது குறித்துபேச முற்படும் போதெல்லாம நீங்கள் எழுத்து நின்று எந்தவொரு குற்றத்தையும் நீங்கள் இழக்கவில்லை என்றே கூறுகிறீர்கள். அப்படி நீங்கள் குற்றம் இழைக்கவில்லையெனில் எதற்கு அஞ்சுகிறீர்கள்? ஏன் ஓடி ஒளிகிறீர்கள்? நீங்கள் இனப்படுகொலை புரியவில்லையென்றால் போர் முடிந்து 13 வருடங்கள் ஆன பிற்பாடும் விசார ணைகளுக்குப பயந்து ஏன் ஓடி ஒளிகிறீர்கள்?

உண்மையான பொறுப்புக்கூறல் இடம்பெறும் வரைக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதை உணரும் வரைக்கும் இங்கு சமாதானம் என்பது எட்டாக்கனியே என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா? அதுவரைக்கும் அனைவரும் ஒருங்கிணைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என நினைக்கிறீர்களா? இனப்படுகொலை என்பது வெறுமனே மக்களைக் கொல்வது மட்டும் அல்ல. இறுதிப் போர் அதன் உக்கிர நிலையை அடைய முன்பு வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் ஏறத்தாழ 4 இலட்சத்து 50 ஆயிரம் பொது மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அரசானது அங்கு 70 ஆயிரம் பொதுமக்களே இருப்பதாக கூறிக்கொண்டு 70 ஆயிரம் பேருக்கான உணவையும் மருந்தையுமே அனுப்பி அந்த மக்களைப் பட்டினி போட்டது. அதன் மூலம் அந்த மக்கள் முழுமையாகவோ பகுதியாகவோ அழியக்கூடிய நிலையை உருவாக்கியிருந்தீர்கள். இது இனப்படுகொலையே” - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் சரத் வீரசேகர கொதித்தெழுந்து கஜேந்திரகுமாரின் பேச்சைக் குழப்பி தாம் இனப்படுகொலை புரியவில்லை என்றும், பொது மக்களை மீட்டோம் என்றும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய கஜேந்திரகுமார் எம்.பி.,

“இனப்படுகொலையில் நீங்களும் ஒரு குற்றவாளி என்றே நாம் கூறுகின்றோம். இனப்படுகொலை நடந்ததாக நான் பொய் கூறுவதாக நீங்கள் கூறினால் அதை ஏன் நீங்கள் சர்வ்தேச நீதிமன்றத்துக்குத் துணிவுடன் சென்று சாட்சிகளைக் கொடுக்கக் கூடாது? இனப்படுகொலை செய்யவில்லையெனில் ஏன் நீங்கள் பயமின்றி ரோம் சாசனத்தில் கையெழுத்திடக்கூடாது? நீங்கள் குற்றமற்றவர்களெனில் ஏன் அஞ்சுகிறீர்கள்? நாங்கள் தமிழ் பிரதிநிதிகள் இந்தச் சபையில் கூறுவதைக்கூட கூறவிடாமல் குழப்புகிறீர்கள். இது எதற்காக? நீங்கள் குற்றமற்றவர்களெனில் ஏன் பயப்படுகின்றீர்கள்?

இன்று போர் முடிந்து 13 வருடங்கள் ஆனாலும் வடக்கு, கிழக்கில் பாரிய இராணுவ கட்டமைப்பை பேணிக்கொண்டு இருக்கிறீர்கள். வடக்கு, கிழக்கில் 10 பேருக்கு 1 என்ற விகிதத்தில் இராணுவம் நிலைகொண்டிருக்கின்றது. வன்னியில் 1:5 எனும் விகிதத்தில் இராணுவம் இருக்கிறது. இப்படி இராணுவத்தை நிலை நிறுத்துவதன் மூலம் மக்களை ஒரு பயப் பிராந்திக்குள் வைத்திருக்க முயல்கிறீர்கள். போர் முடிந்து 13 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் நீங்கள் செய்த குற்றங்களின் ஆதாரங்கள் வெளியே சென்றுவிடும் என அஞ்சுகிறீகள்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தனது கடந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி இலங்கைப் படையினரின் குற்றங்கள் குறித்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் கோவைகள் தம்மிடம் இருப்பதாகக் கூறியதையிட்டு அஞ்சுகிறீர்கள். நீங்கள் உண்மைகளைக் கண்டு அஞ்சுகிறீர்கள். உண்மைகளைக் கண்டு பயந்து ஓடிக்கொண்டு இருக்கும் வரையில் இனப்படுகொலை புரிந்தவர்களை பாதுகாத்துக்கொண்டு இருக்கும் வரையில் இனப்படுகொலை என்பது தப்பிக்கொள்ளக்கூடிய ஒரு குற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் உங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியாது் பாதுகாப்பாக உணரவும் முடியாது.

உங்கள் சரிபிழைகளைக் கண்டுகொள்ளாமல் உங்களை ஆதரிக்க கூடியவர்களை நண்பர்களாக்கி இனப்படுகொலைக்கான நீதியை வழங்காமல் இருப்பதை உறுதிப்படுத்தி கொண்டு உங்கள் பிழைகளை மறைக்கக்கூடிய கூட்டாளிகளை பெறுவதற்காக உங்கள் நாட்டையே நீங்கள் கூறுபோட்டு விற்கத் தொடங்கியிருக்கிறீர்கள்.

நீங்கள் நேசிப்பதாக கூறுகின்ற இந்த நாட்டின் ஆத்மாவையே ஒவ்வொரு நாளும் விற்கத் தொடங்கியிருக்கிறீர்கள். இன்று இலங்கை பங்களாதேசத்திடமும் கையேந்துகின்ற நிலமை வந்திருக்கின்றது. போர் முடிவடைந்து 13 வருடங்களில் நீங்கள் சாதித்தது இதைத்தான். அதைப் பார்க்க வெட்கமாக இல்லையா? இந்தத் தீவில் இருக்கும் ஒவ்வொரு தேசங்களும் தம்மை பாதுகாப்பாக உணரும்போது தான் இது உண்மையான இலங்கை.

இந்தத் தீவில் இருக்கும் ஒவ்வொரும் தேசங்களும் தம்மைப் பாதுகாப்பாக உணரும்போதுதான் தாம் இலங்கையன் என ஒருவனால் விசுவாசமாக உணர முடியும். அது வரைக்கும் நீங்கள் விரும்புகின்ற அந்த இலங்கை எனும் நாட்டை உருவாக்கிகொள்ள உங்களால் முடியாது.

மாறாக நீங்கள் இனவாத பாதையிலேயே தொடர்ந்தும் சென்று இனங்களுக்கிடையிலே பிரிவினையையும் குரோதத்தையும் வளர்க்கிறீர்கள். அப்படி இந்த மக்களை பிளவுபடுத்தி வைப்பதன் மூலமே உங்கள் வாக்குவங்கியை நீங்கள் நிலைநிறுத்திக் கொள்கிறீர்கள். ஆனால், இன்று இந்த நாட்டு மக்கள்எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளால் சாதாராண சிங்கள் மக்களே என்றுமில்லாதவாறு முதல் தடவையாகதமது தலைவர்களுக்கு எதிராக கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். நானோ அல்லது எனது சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோ சொல்வதை இனவாத பேச்சு என இது வரை காலமும் சொல்லி தள்ளி வைத்த சாதாரண சிங்கள மக்களும் இன்று உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். நாம் சொல்பவற்றை செவிமடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர்கள் குறித்தும் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்தும் சாதாரண சிங்கள மக்களுக்கு அவர்களின் தலைவர்களால் சொல்லப்பட்டு வந்த பொய்கள் குறித்து கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் தொடர்ந்தும் நீங்கள் இந்த அராஜகப் போக்கிலேயே போக முடியாது. மாறாக இந்தப் போக்கிலேயே போனால் நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்களத் தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல. ஏனெனில் உண்மைகள் புரியத் தொடங்கும்போது ஒரு சிங்களவர் எழுந்து “கருணையையும் அன்பையும் அகிம்சையையும் போதிக்கும் புத்தர் பெருமானை நான் பின்தொடர்கிறேன்; பூசிக்கிறேன். ஆனால், எங்களது பெயரினால் இப்படியான கொடூரங்கள்தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்றதெனில் அந்த மக்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்” எனக் கூறுவார் என நம்புகின்றேன்.

உங்கள் பாதையை நீங்கள் மாற்றிக் கொள்ளாதுவிடின் நிச்சயம் அப்படி ஒரு நிலைமை உருவாகும். தமிழர்கள் யாருக்கும் எதிரிகள் அல்ல. அவர்கள் யாருக்கும் எதிராக போருக்கும் முன்வரவில்லை. அவர்கள் கேட்பது எல்லாம் தமக்கே உரித்தான உரிமைகளை மட்டும்தான். அதற்காகத் தான் கடந்த 75 வருடங்களாக அவர்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இலங்கை ஒரு நாடாக ஸ்திரத்தன்மையுடன் தொடர்ந்தும் இருக்க வேண்டுமெனில் நீங்கள் கடந்த 74 வருடங்களாக செல்லும் அதே பாதையில்தொடர்ந்தும் செல்ல முடியாது. இலங்கை ஒரு பல்தேசங்கள் கொண்ட நாடென்பதை ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் நீங்கள் எங்களை மட்டுமல்லாது உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகின்றீர்கள் என்பதை மீண்டும் தெரிவித்துகொள்கின்றேன்” - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu

# சஜித் போல் சம்பிக்கவும் தோல்வியடைவார் அடுத்த தடவையும் கோட்டாபயவே வெற்றி!

## அமைச்சர் ரோஹித ஆருடம்



கொழும்பு, டிசெ. 06

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொது வேட்பாளராகச் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டால் சஜித் பிரேமதாஸ போல் நிச்சயம் படுதோல்வியடைவார் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

அடுத்த தடவையும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே களமிறங்குவார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தத் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷவே அமோக வெற்றியடைவார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவைக் களமிறக்கத் தெற்கில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது எனவும், வடக்குக்கு தற்போது பயணம் மேற்கொண்டுள்ள சம்பிக்க ரணவக்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னரே சஜித் பிரேமதாஸ நாட்டின் 24 மாவட்டங்களிலும் சூறாவளிபோல் சுற்றித் திரிந்தார் தேர்தல் பிரசார மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசினார். ஆனால், இறுதியில் அவர் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

சஜித் பிரேமதாஸ போல் ஜனாதிபதி பதவி ஆசையில் தற்போது சம்பிக்க ரணவக்கவும் கிளம்பியுள்ளார் போல் தெரிகின்றது. அவரும் சஜித் போல் படுதோல்வியடைவார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வரிசையில் சம்பிக்க மட்டுமன்றி பல பேர் களமிறங்கினாலும் அவர்களைத் தோற்கடித்து மீண்டும் ஜனாதிபதிக் கதிரையில் கோட்டாபய ராஜபக்ஷ அமருவார். சிங்கள - பௌத்த மக்களின் அமோக வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கே கிடைக்கும். அதை எவரும் தட்டிப் பறிக்க முடியாது" - என்றார். (இ)

# பாகிஸ்தானில் இலங்கை பிரஜையை கொன்றவர்களுக்கு மரண தண்டனை

## மனோ எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 06

பாகிஸ்தானில் இலங்கையரைக் கொடூரமாகக் கொலைசெய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

"சியால்கோட்டில் இலங்கை நிர்வாக அதிகாரி பிரியந்த குமாரவை அடித்து, எரித்துக் கொலை செய்த அடிப்படைவாத கும்பலுக்கு, குறிப்பிட்ட காலவரைக்குள், அதிவேக சட்ட நடவடிக்கை மூலம், உச்சபட்ச மரண தண்டனை வழங்கப்படுவதைத் தவிர எதுவும் எங்களை ஆறுதல்படுத்தாது மிஸ்டர் பிரைம் மினிஸ்டர் இம்ரான் கான்" எனவும் மனோ கணேசன் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# மேலும் 316 பேர் குணமடைவு

கொழும்பு, டிசெ. 06

நாட்டில் மேலும் 316 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 42 ஆயிரத்து 326 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள்: விசாரணை அறிக்கைகள் அடுத்த வாரம்

கொழும்பு, டிசெ. 06

சமையல் எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, எதிர்வரும் இரண்டு வாரங்களில் முதற்கட்ட விசாரணைகள் சம்பந்தமான தகவல்களை வெளியிடவுள்ளது.

அத்துடன் நேற்று முதல் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதியளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள நுகர்வோர் அதிகார சபை, எரிவாயு மாதிரிகள், இலங்கை கனியவள கூட்டுதாபனத்தின் பகுப்பாய்வகத் திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட அறிக்கைக்கு அமைய தொழில் நுட்பக் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் எதிர்வரும் வாரத்தில் வாக்குமூலம் பெறப்படவுள்ளது என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

அவர்களை நிபுணர் குழுவுக்கு அழைத்து வாக்குமூலம் பெறப்படவுள்ளது என அதன் தலைவர் சாந்த வல்பலகே தெரிவித்தார். (இ)















இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மதராச பட்டிணம்,நான் மகான் அல்ல ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-வைத்திய நிபுணர் மதிவாணன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி - அதிகரித்து வரும் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படுவது மக்களா? வர்த்தகர்களா?




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு